உ

தொல்காப்பியரே துணை! தொல்காப்பியமே வழிகாட்டி!

# ஓல்காப்பெரும்புகழ்த்

# தொல்காப்பியர் பிள்ளைத்தமிழ்

## தொல்காப்பியர் நாள் விழா

தொல்காப்பியர் ஆண்டு 2732 தி.ஆ.2052

மேழம் (சித்திரை) திங்கள் (26.04.2021)

**இயற்றியவர்**

**தொல்காப்பியச் செம்மல்**

**புலவர். ஆ.காளியப்பன்** க.மு., கல்.மு.,

**தலைவர்,** தொல்காப்பியர் தமிழ்ச் சங்கமம்

**வெளியீடு**

**தொல்காப்பியர் தமிழ்ச்சங்கமம்**

*முத்தம்மாள் நிலையம்,*

*பூலுவபட்டி(அஞ்சல்), கோயமுத்தூர் 641 101.*

*அலைபேசி 97885 52993(புலனம்)/86106 84232*

Email: amuthankaliappan@gmail.com

pulavarkaliappan.blogspot.in

www tholkappiyam.org


## நூற்குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | ஒல்காப் பெரும்புகழ்த்<br>**தொல்காப்பியர் பிள்ளைத் தமிழ்** |
| பதிப்பாசிரியர் | : | தொல்காப்பியச் செம்மல்,<br>புலவர். திரு. **ஆ. காளியப்பன்** |
| முதற்பதிப்பு | : | 2021 |
| இரண்டாம் பதிப்பு | : | 2022 |
| பக்கங்கள் | : | 128 |
| படிகள் | : | 500 |
| நூல் அளவு | : | 1/8 டெம்மி |
| தாள் | : | 18.6 கி.கி. மேப்பிலித்தோ |
| அட்டை | : | கலர் (300 ஜி.எஸ்.எம். ஆர்ட்போர்டு) |
| வெளியீட்டு நாள் | : | தொல்காப்பியர் ஆண்டு 2732 தி.ஆ.2052<br>மேழம் (சித்திரை) திங்கள் (26.04.2021) |
| விலை | : | ரூ. 120/- |
| வெளியீடு | : | **தொல்காப்பியர் தமிழ்ச்சங்கமம்**<br>*முத்தம்மாள் நிலையம்,*<br>*பூலுவபட்டி(அஞ்சல்),*<br>*கோயமுத்தூர் 641101.*<br>*அலைபேசி 9788552993/8610684232*<br>Email: amuthankaliappan@gmail.com<br>www tholkappiyam.org,<br>pulavarkaliappan.blogspot.in |
| அச்சாக்கம் | : | **சௌமி அச்சகம்,**<br>சரவணம்பட்டி, கோவை - 35.<br>அலைபேசி : 98422 52779 |

# குரு வணக்கம்



மதிசேர் முடியனை நெஞ்சத்தில் எண்ணும்
பதியாம் மருதா சலக்கோ - விதியெனச்
சொன்னதை ஏற்பேன் சிரமேல்தான் என்றுமே
உன்னுவேன் உன்னடி நான்.



உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம்

பேரூராதீனம் குருமகா சந்நிதானம் முனைவர்

**தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகள்**

பேரூர், கோயமுத்தூர் - 641010, தமிழ்நாடு.

# அருள் வாழ்த்துரை

போற்றி ஓம் நமசிவாய. நமக்குக் கிடைத்திருக்கும் தமிழ் இலக்கண நூல்களிலே மிகவும் தொன்மையானது தொல்காப்பியம். இரண்டாம் தமிழ்ச்சங்க காலத்தைச் சார்ந்த தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் எனும் அதிகாரங்களைக் கொண்டதாகத் திகழ்வது. தொல்காப்பியத்தை நல்கிய தொல்காப்பியர் பன்னிரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகத் தோன்றியவர் என்ற வழக்குகள் இருந்தாலும் கூட அறிஞர் பெருமக்கள் பொ.ஆ.மு.*711* என்பதை, தொல்காப்பியர் ஆண்டுக்கான தொடக்கமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இலக்கணங்களில் எழுத்து, சொல் என்று இருந்த சூழலில் பொருளுக்கென்றுச் சிறப்பான முறையிலே படைத்துத்தந்த தொல்காப்பியரை உலகெங்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்பது அறிஞர்களுடைய உள்ளக் கிடைக்கை. திருவள்ளுவரை முன்னிறுத்தி உலகமெங்கிலும் பல்வேறு மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு திருவள்ளுவர் உலகறிந்த புலவராக இருக்கின்றார். ஆனால் தமிழக அளவில் தொல்காப்பியம் என்பது வெளிப்படுத்தப்படாமல் இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் தமிழிலக்கியம் இளங்கலை, முதுகலை படிப்போர் தொல்காப்பியத்தைத் தவிர்த்துவிட்டு பிற நூல்களைப் படிப்பது வருத்தத்திற்குரியது.

இத்தகைய சூழலிலே தொல்காப்பியத்திற்கு என்று தனியாகத் தொல்காப்பியர் பேரவை என்ற அமைப்பை அமைத்து பின்னர் அதைத் தொல்காப்பியர் சங்கமம் என்ற பெயரிலே அதை மாற்றியமைத்துச் சுமார் நாற்பது திங்களுக்கு மேலாகத் தொடர்ந்து நம்முடைய ஆதீனத்திலே ஒவ்வொரு திங்களும் முதல் ஞாயிறன்று தொல்காப்பியத்திலிருந்து

சொற்பொழிவைத் தொடர்ந்து ஆற்றிக் கொண்டிருப்பவர் புலவர் காளியப்பன் அவர்கள். அவர்கள் இருபத்து நான்காம் குருமகாசந்நிதானங்களின் பாலும் நம்பாலும் ஈடுபாடு கொண்டவராக இருப்பவர். தமிழகத்தில் உள்ள துறைசார் அறிஞர்களை நேரடியாகவும் இணைய வழியாகவும் அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்து சிறப்பித்தவர்.

தீநுண்மி (கொரோனா) பெருந்தொற்று காலத்திலேயும் கூடத் தொடர்ந்து இடையறாது புலவர் காளியப்பன் அவர்கள் இப்பேரவையை நடத்தியது பாராட்டுதற்குரியது. பேரவை நடைபெறும் நாட்களில் நமது பேரூராதீனம் சிறப்பான முறையில் அதற்குத் தேவையான வகையில் ஒத்துழைப்பு நல்கிவருவது பாராட்டுதற்குரியது. இத்தகைய சிறப்புகள் பெற்ற புலவர் காளியப்பன் அவர்கள் தொல்காப்பியர் மேலே அருமையானதொரு பிள்ளைத்தமிழைப் பத்துப் பருவம் கொண்டு பாடியிருக்கின்றார்கள்.

பொதுவாகப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் தோற்றமாக ஆழ்வார்களுடைய காலத்தைச் சொல்வார்கள். பெரியாழ்வார் கண்ணனைத் குழந்தையாகப் பாவித்துப் பாடித் தாலாட்டி வருக வருக என்று பாடுவார். அவ்வாறு தோன்றி முழுவடிவம் பெற்ற பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் முதல் பிள்ளைத்தமிழ் இலக்கியம் குலோத்துங்கன் சோழன் பிள்ளைத்தமிழ் ஆகும். பின்னர் பலர் மேல் பிள்ளைத்தமிழ் இலக்கியம் பாடப்பட்டுள்ளது. ஆதியும் அந்தமும் இல்லாத சிவப்பரம் பொருளைப் பிள்ளையாகப் பாவித்து பாடுவது நம்முடைய மரபில்லை என்பதால் சிவபெருமான் தவிர்த்து எல்லாக் கடவுளர்களுக்கும் மாந்தர்கள் பலருக்கும் பிள்ளைத்தமிழ் இலக்கியம் பாடப்பட்டுள்ளது.

அவ்வகையில் தொல்காப்பியர் பிள்ளைத்தமிழின் காப்புக்காகத் தமிழ்த்தாயையும், தெய்வங்கள் தொல்காப்பியர் காட்டிய அந்நானிலத் தெய்வங்களையும் தொல்காப்பியர் வகுத்துக் கொடுத்த ஐம்பூதங்களையும் காப்புத் தெய்வங்களாக அமைத்திருக்கின்றார். மேலும் திருவள்ளுவரையும் திருவள்ளுவர் சொல்லிய ஆதிபகவனையும் நம்முடைய மரபாகச் சொல்லும் முச்சங்கத்திலும் இருந்த தமிழ்ப் புலவர்களையும் காப்பிற்காக அமைத்துப் போற்றி இருக்கின்றார்கள். அதற்கும் மேலாக

சிறப்பாகப் பல்வேறு வகையிலே இந்த கல்வியை நல்கியதாக உள்ள ஆசிரியப் பெருமக்களையும் காப்புப் பருவத்தில் வேண்டியிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. அமெரிக்காவில் உள்ள தொல்காப்பிய மன்றத்தையும் பல நாடுகளிலும் திரைகடல் ஓடி திரவியம் தேடுவதற்காகச் சுமார் 150 நாடுகளுக்கு மேலாக உள்ள நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்களையும் காப்புப் பருவத்தில் வைத்துப் பாடியிருப்பது பாராட்டுதற்குரியது. அதேபோல தற்போது ஆய்வு என்பது வெறும் மேம்போக்காக தற்கால இலக்கியங்களை ஒட்டி அமைந்துள்ள நிலையில் பக்தி இலக்கியம், சங்க இலக்கியங்கள், இலக்கணம் தொடர்பாக உள்ள ஆய்வுகள் வரவேண்டும் என்பதற்காக அந்த ஆய்வாளர்களைக் காப்புப் பருவத்தில் வைத்துப் பாடியுள்ளார்.

இவை அனைத்திற்கும் மேலாக நமக்கு எல்லாவற்றிற்கும் துணையாக இருப்பது என்று சொல்லி, தொல்காப்பியரே காக்க என தொல்காப்பியரையும் காப்புப் பருவத்தில் வைத்துப் பாடியிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. காப்புச் செய்யுளிலே பத்து பாடல்கள் வைத்துப் பாடுவார்கள். இவர் பதினொரு பாடல் அமைத்துப் புதுமை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பின்வரும் செங்கீரை ஆதிய பருவங்களில் தனது சுயசொல்லை எடுத்துச் சொல்லாமல் தொல்காப்பியத்திலே உள்ள அந்த சொல்லாட்சியையே எடுத்திருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது.

இருபத்து நான்காம் குருமகாசந்நிதானங்கள் புலவர் அவர்களுக்கு ஆசிரியராக, வழிகாட்டியாக இருந்து செயல்படுத்தியவர்கள். அவர்களைப் பற்றி ஆறு பாடல்களில் கூறியிருப்பது போற்றுதற்குரியது. அடிகள் பெருந்தகை அவர்கள் தொல்காப்பியம் கூறும் தாபதநிலை பற்றி நிறைய இடங்களில் சொல்வார்கள். தமிழ்ப்புலவர்கள், தமிழறிஞர்கள் என யார் வந்தாலும் தொல்காப்பியர் கூறும் தாபதநிலை குறித்து அவர்களிடத்தே பேசுவார்கள். தொல்காப்பியத்தை அத்தகைய நிலையில் வைத்துக் கற்ற, கற்பித்த அடிகள் பெருந்தகை அவர்கள் அதைக் கட்டாயமாக இளங்கலையிலேயும் முதுகலையிலேயும் பாடமாக வைக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய நெறியை வகுத்துக்கொடுத்தார்கள். அவர்களை ஆறுக்கும் மேற்பட்ட இடங்களிலே குறிப்பிட்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

பெரும்பாலான பாடல்களில் தொல்காப்பியத்தில் உள்ள இயல்கள், அவற்றுள் உள்ள நூற்பாக்கள், அவற்றுள் உள்ள சொற்கள் என்ற வகையில் இடம்பெற்றிருப்பது மிகவும் மகிழ்வுக்குரியது. பொதுவாகப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் வருகைப் பருவத்தைச் சிறப்பாகச் சொல்லுவார்கள். அவ்வகையில் இந்நூலின் வருகைப் பருவத்தைத் தொடங்கும் போதே நம்முடைய திருமடத்தையும் சேர்த்துத் தொடங்கியிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. 'சாந்தையர் திருமடத்தைச் சார்ந்தே இருக்கும் சாற்றிதிரு நின்பெயரால் இயங்கும் சங்கமம்' என்று சொல்லியும் 'போந்து எம் உயிர்க்குயிராம் துணையொத்த காப்பியனே' என்று சொல்லக் கூடிய வகையில் திருப்போரூர் சிதம்பர சுவாமிகளின் வரிகளை எடுத்தாண்டிருப்பதும் பாராட்டுக்குரியது.

பொதுவாக அம்புலி பருவத்தைச் சொல்லுகின்றபோது சிறப்பான முறையிலே சொல்லுவார்கள். அம்புலி பருவம் என்பது புலவர்களுக்கு எல்லாம் மிகவும் கடினமான ஒன்று. ஆனால் இவர்கள் எளிமையான முறையில் சமமெனக் கூறல், வேறுபடுத்தி உரைத்தல், தானம் கிடைக்கும் என்றும் தண்டனை கிட்டும் என்ற வகையிலே சிறப்பாகக் கூறியுள்ளார். சாம, பேத, தான, தண்டத்திற்குரிய பாடல்கள் சமமான முறையில் அமைந்திருக்கும். ஆனால் இதில் தண்டத்திற்கு அதிகமாகப் பாடலை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. நம்முடைய மொழியில் வடசொற்கள் கலந்துள்ளன. அறியாமையின் காரணமாகத் தமிழக அரசு ஐந்து எழுத்துக்களைத் தமிழ் எழுத்துக்களோடு சேர்த்து எழுதுதல் தவறில்லை என்ற அரசாணை விட்டிருக்கும் காலத்தில் 'வடசொல் கிளவி வட எழுத்து ஒரீஇய' தன்மை உடைய பாடங்களை பாடல்களாக அமைந்திருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது.

பொதுவாகத் தமிழருடைய குணம் சுயமாக ஒருவன் அறிவாளியாக இருந்தால் அந்த அறிவாளியாக இருக்கக் கூடியவன் தமிழனாக இருக்க முடியாது என்பதுதான். அதை திருவள்ளுவருக்கும் சொல்லுவார்கள் தொல்காப்பியருக்கும் சொல்லுவார்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குச் சொல்லுவது நிலையான ஒன்றாக இருக்கின்றது. அப்படிப் பட்ட வகையிலே தொல்காப்பியத்திற்கு நச்சினார்க்கினியரின்

உரை சிறப்பு வாய்ந்தாக இருந்தாலும் கூட நச்சினார்க் கினியருடைய கருத்தை மறுக்கக்கூடிய வகையிலே எழுதியிருப்பது மிகவும் சிறப்பிற்குரியதாக அமைந்துள்ளது.

நம்முடைய பேரூர்த் திருமடத்தைச் சிறப்பான முறையிலே சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாக இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்கள் தொல்காப்பியத்திற்காக ஆற்றிய தொண்டு மிகவும் பாராட்டுதற்குரியது. இருந்தாலும் கூட ஒரு மரபு கருதி பூவோடு சேர்ந்து நாரும் மணக்கும் என்கின்ற அடிப்படையிலே சாந்தலிங்கப்பெருமானின் தண்ணருளும் இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்களின் குருவருளும் இருக்கும் என்கின்ற காரணமாகவும் அவர்தம் வழிகாட்டுதலில் இருப்பதாலும் நம்மையும் ஓர் பொருட்டாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த என்ற அடிப்படையிலே நம்மையும் பல இடங்களிலும் குருவணக்கத்திலும் சொல்லியிருப்பது நமக்கு மிகையாக இருந்தாலும் அவர்களுக்கு நிறைவைத் தரக்கூடிய வகையில் இருக்கும் எனக் கருதுகின்றோம்.

அவ்வகையில் நாம் இன்னும் சிறப்பான முறையிலே பல்வேறு வகையான இலக்கியப் பணிகளைத் தொடர்ந்து செய்ய வேண்டும். நமக்கு எப்பொழுதும் அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே என்ற கருத்து இருக்கின்றது. ஆகவே நம் கடன் பணி செய்து கிடப்பதே என்ற அடிப்படையில் ஒல்லும் வகையால் நமது பணிகளை நாம் செய்துவருகின்றோம் என்பதைக் கூறிச் சிறப்பான முறையில் உருவாகியுள்ள இந்நூல் சிறக்கவும் இந்நூலை உருவாக்கியுள்ள புலவர் காளியப்பன் அவர்களும் இந்நூல் உருவாக உழைத்த அனைவரும் வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழவும் எல்லாம்வல்ல அருள்மிகு அம்பலவாணப் பெருமான் இன்னருளையும் அருள்திரு சாந்தலிங்கப் பெருமான் தண்ணருளையும் இருபத்து நான்காம் குருமகாசந்நிதானங்கள் கயிலைக்குருமணி தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை அவர்களின் குருவருளையும் நினைந்து வாழ்த்துகின்றோம். வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

குருவே துணை



**முனைவர் தவத்திரு**
**குமரகுருபர சுவாமிகள்**
**ஆதீனத் தலைவர், சிரவையாதீனம்,**
**கௌமார மடாலயம்,**
**சின்னவேடம்பட்டி (அஞ்சல்), கோவை**

# வாழ்த்து

தமிழின் சிறப்புக்களில் ஒன்று தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் ஆகும். பிரபந்தங்களில் சிறப்புடையது பிள்ளைத்தமிழ் என்கின்ற பெருந்தமிழ் ஆகும். பிள்ளைத்தமிழ் என்பது ஒரு தெய்வத்தையோ, சான்றோரையோ பத்துப் பருவங்களில் பாடிச் சிறப்பிப்பது ஆகும். தமிழில் பிள்ளைத்தமிழ் நூல்கள் நிரம்ப இருக்கின்றன. இவற்றைக் கருவி நூல்கள் என்பார்கள். தமிழின் சுவை அறிவதற்கும், சொல்லின் இனிமையை நுகர்வதற்கும், நல்ல பொருள் தரும் கவிதைகளை ஆய்வதற்கும் பிள்ளைத்தமிழ் நூல்கள் உதவி செய்கின்றன. நம்முடைய சிரவை ஆதீனத்தின் இரண்டாவது குருமகாசந்நிதானங்களாக எழுந்தருளி இருந்த தவத்திரு கந்தசாமி சுவாமிகள் அவர்கள் பிள்ளைத்தமிழ் நூல்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார். மரபுக்கவிதைகள் யாக்கும், போக்கு குறைவு ஏற்பட்டுள்ள இந்தக் காலத்திலும் தமிழ்க் கவிஞர்கள் பலர் மரபுக்கவிதைகளை யாத்து, தமிழை வளப்படுத்துவது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

அந்தவகையில், நம்முடைய அன்பிற்குரிய புலவர் ஆ.காளியப்பன் அவர்கள் தமிழின் மூத்த புலவனும், தமிழ் இலக்கணம் தந்த பெருந்தகையுமான ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியனார்க்குப் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். இது பாராட்டுதற்குரியது. ஏனைய பிள்ளைத்தமிழ் நூல்களிலிருந்து, இந்தப் பிள்ளைத்தமிழ் நூல் முற்றிலும் வேறுபட்டதாக விளங்குகிறது. குறிப்பாகக் காப்புப்பருவத்தில், எந்த ஒரு தெய்வத்தையும் குறிப்பிடாமல் ‘தமிழ்த்தாயையும், நானிலத் தெய்வங்களையும், ஐம்பெரும் பூதங்களையும், ஆதிபகவனையும், திருவள்ளுவரையும், உலகத்

தொல்காப்பிய மன்றத்தையும், பலநாடு பரவிய தமிழர்களையும், ஆய்வாளர்களையும்'' தமிழ்த்தாய் தலைமகன் தொல்காப்பியரைத் தரணியில் காப்பீரே என்று குறிப்பிடுவது புதுமை நெறி. இது பாராட்டற்குரியது.

பிள்ளைத்தமிழ் இலக்கணத்திற்கு ஏற்ப ஒவ்வொரு பருவத்திற்கும், பத்துப் பத்து பாடல்களாக மிகச்சிறந்த முறையில் அழகான, அருமையான, இனிமையான, ஓசை நயமிக்க பாடல்களால் பாடியிருப்பது மிகவும் சிறப்புடையதாக அமைந்திருக்கின்றது. தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல் ஆனதால், அந்த நூலில் கூறியுள்ள இலக்கணக் கருத்துக்களைப் பெரும்பாலான பாடல்களில் குறித்திருப்பது மிகவும் அருமை, அற்புதம்.

**மெய்யை விட்டு உயிர் நீங்கின் மெய்தான் இயங்காது,**
**மெய்தான் இன்றி உயிர் தனித்து இயங்கும்**

என்று செங்கீரைப் பருவத்தின் ஐந்தாம் பாடலில் குறிப்பிட்டிருக்கிறார். இதுபோல பெரும்பான்மையான பாடல்களில் தொல்காப்பிய நூலில் உள்ள இலக்கணக் குறிப்புக்களை இந்தப் பிள்ளைத்தமிழ் நூல் குறித்திருப்பது மிக மிக அருமை. இதுபோலக் கவிஞர் சுரதா அவர்கள் தம்முடைய பாடல்களில் இலக்கணக் குறிப்புக்களை ஆங்காங்கே அமைப்பார். ஆனால், புலவர் ஆ.காளியப்பன் அவர்கள் யாத்த, இந்தப் பிள்ளைத்தமிழில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள பெரும்பான்மையான இலக்கணக் குறிப்புகளை, பாடல்கள் பலவற்றில் குறித்திருப்பது புலவர் அவர்களுடைய பெரும்புலமையைக் காட்டுகின்றது.

தொல்காப்பியர் வெறும் இலக்கணப் புலவர் அன்று. ஏனைய மொழிகளில் உள்ள இலக்கணத்தைப் போல் எழுத்தையும், சொல்லையும் மட்டும் குறிப்பிடாமல், அந்த எழுத்துக்கும், சொல்லுக்கும் உடைய தமிழர்கள் வாழவேண்டிய நெறிமுறைகளைப் 'பொருளதிகாரம்' என்கிற ஒரு தனி அதிகாரத்தில் அமைத்து, தமிழனுடைய பண்பாட்டை மிகச்சிறப்பாக எடுத்துக் கூறுகின்ற ஒரே நூல் தொல்காப்பியம் என்பதில் ஐயமில்லை. தொல்காப்பியத்திற்கு உரை வழங்கியவர்கள் பலர். அவ்வாறு உரை வழங்கிய பெருமக்களை எல்லாம் பாராட்டி, அவற்றை ஒரு பாடலில்

குறித்திருப்பது மிகவும் சிறப்புடையது. அம்புலிப்பருவம், பிள்ளைத்தமிழ் பாடுபவர்க்குப் புலி போன்றது என்பார்கள், ஆனால், அப்பருவத்திலும் மிக அருமையான முறையில் இருபத்தேழு நட்சத்திரங்களும், ஒன்பது கோள்களும் போல தொல்காப்பியமும், இருபத்தேழு அதிகாரங்களையும், அதிகாரத்திற்கு ஒன்பது இயல்களையும் கொண்டு விளங்குகிறது என்று கூறி இந்த இரண்டும் சமம் என்று கூறுவதும், சந்திரனும், தொல்காப்பியருடைய தொல்காப்பியமும் வெவ்வேறு வகை என்பதும் சுவைபட இலங்குகின்றன. இறுதியாகச் சிறுதேர்ப் பருவத்தில்,

**‘தெள்ளு தமிழின் காவலன் நீரே**
**திறமுடைத் தமிழரின் அரணும் நீரே**
**வள்ளுவன் காட்டிய வழித்துணை நீரே**
**வளம்பெறுக உலகெலாம் வண்டேர் உருட்டுகவே‘**

என்று போற்றி நிறைவு செய்திருப்பது மிகவும் அருமையாக இருக்கின்றது. ஆக, புலவர் ஆ.காளியப்பன் அவர்களைத் தொல்காப்பியச் செம்மல் என்று கூறுவது முற்றிலும் சாலும், அவரது பிள்ளைத்தமிழ் நூலிலுள்ள ஒவ்வொரு பாடலுக்கும் உரை கண்டு, பயில்வாரேயானால் அதுவே தொல்காப்பியம் முழுவதையும் பயின்ற ஒரு நிறைவும், நிலையும் ஏற்படும். அந்த அளவிற்குத் தொல்காப்பியத்திலுள்ள நுணுக்கங்களை எல்லாம் அவர் இந்தப் பிள்ளைத்தமிழ் கொண்டுவந்திருப்பது உண்மையிலேயே மிகவும் அருமையாக உள்ளது. ‘தொல்காப்பியச் சங்கமம்’’ என்ற பெயரில் ஒவ்வொரு திங்களிலும் தொல்காப்பிய ஆய்வுகளை அவர் நிகழ்த்தி வருவது இன்னும் பாராட்டுதற்குரியது. இதுபோல, மேலும் அரிய நூல்களை அவர் படைத்து, தமிழன்னைக்குப் புதிய ஆரங்களை அவர் சூட்டுவார் என்று எதிர்பார்ப்போமாக, அவருடைய முயற்சிகள் மேலும் தொடர வேண்டும் என்று வாழ்த்தி, அவருக்கு எல்லா நலன்களும் பெருகவேண்டும் என்று எமது வழிபடு கடவுளான தண்டபாணிக் கடவுளின் திருவடிமலர்களை நீள நினைந்து வாழ்த்துகின்றோம்.

நாள் : 11.11.2020 (தவத்திரு குமரகுருபர சுவாமிகள்)

**பாவலர் காளியப்பன் இயற்றிய தொல்காப்பியர் பிள்ளைத் தமிழுக்கு**

## வாழ்த்துரை

நூலென் றாலே இலக்கணமே;
    நூலை நுவல் வோன் இலக்கணனே;
நூலென் பவற்றுள் தாய்நூலாம்
    நூலாய் அமைதொல் காப்பியத்தைப்
பாலென் றருந்தத் தந்தவனைப்
    பாலன் ஆக்கித் தமிழ்பாடிப்
பாலென் றருந்தத் தந்துள்ளார்
    பண்புக் காளி யப்பரவர்!

தெள்ளத் தெளிந்த நடைத் தமிழில்
    தேனும் பாலும் கலந்தது போல்
கொள்ளக் கொடுத்த கொடைநலத்தைக்
    கொஞ்சிக் கற்பார், பன்னூல்கள்
வெள்ளப் பெருக்காய்ப் பெற்றிடுவோர்;
    வெல்லச் சுவையாய்க் கொண்டிடுவார்;
அள்ளிக் கொள்க அமைத்தட்டாய்
    அருமைத் தமிழின் வளமென்றே.

தொல்காப் பியர்க்குத் தமிழ்பாடித்
    தொட்டிற் குழந்தைத் தாலாட்டாய்
ஒல்காப் பெருமை சேர்ந்துள்ள
    உயர்ந்த காளி யப்பரவர்
அல்கா வளமும் பெரும் புகழும்
    அமைந்து சிறக்க வாழியரே!
பலகாப் பியங்கள் யாத்தளித்துப்
    பாரிற் சிறந்து வாழியரே!.



இன்ப அன்புடன்,

தங்கல் : கோவை, பேரூர்

சாந்தலிங்கர் திருமடம்

07.03.2020



தமிழ்மாமணி, ஞானச்செம்மல்,
சித்தாந்தச்சரபம், நல்லிசைப்புலவர்,
சித்தாந்தச்செங்கதிர், சித்தாந்த சரசுவதி,
ஞானத்தமிழாகரர், சிவத்தமிழ்ச்செல்வர்
முனைவர் **ந.இரா. சென்னியப்பனார்** எம்.ஏ.பி.எச்.டி
தலைவர், மணிவாசகர் அருட்பணி மன்றம்,
ஆசிரியர், சமயத்தமிழ் திங்களிதழ்
பேரூர்

# அணிந்துரை

**''ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனடி**
**பல்காற் பரவுதும் எழுத்தொடு**
**சொல்கா மருபொருள் தொகை திகழ் பொருட்டே''**

***(பேராசிரியர்)***

பிள்ளைத்தமிழ் என்பது தெய்வம் அல்லது பாட்டுடைத் தலைவனைப் பிள்ளையாகப் பாவித்து, அக்குழந்தை மீது தாய்ம்மை அன்பு பல திறங்களிலும் வெளிப்படுமாறு பாராட்டிச் சீராட்டிப் பாடுவது ஆகும். ''குழவி மருங்கினும் கிழவதாகும்'' என்ற தொல்காப்பியப் பாடாண்திணை நூற்பாவே பிள்ளைத்தமிழுக்கு அடிப்படை ஆகும். இந்நூற்பாவிற்குப் பிள்ளைத் தமிழ் இலக்கணம் தோன்ற நச்சினார்க்கினியர் உரை வகுத்துள்ளார். வைணவப் பெரியார் பெரியாழ்வார் அருட் பாடல்களில் கண்ணனைப் பற்றிய பாசுரங்களில் பிள்ளைத்தமிழ்ப் பற்றிய அமைப்பு காணப்பெறுகின்றது. பிள்ளைத் தமிழின் பத்துப் பருவங்களைச் சேக்கிழார் பெருமான் திருஞானசம்பந்தர் புராணத்தில் சிறப்பாகப் பாடியுள்ளார். அக்காலத்தைச் சார்ந்த கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத் தமிழே முதல்பிள்ளைத் தமிழாகும்.

ஆண்பாற் பிள்ளைத் தமிழ் பெண்பாற் பிள்ளைத் தமிழ் எனப் பிள்ளைத் தமிழ் இருவகைப்படும். ஆண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம்,

வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில் சிறுதேர் என்ற பத்துப்பருவங்கள் கழிநெடில் ஆசிரிய விருத்தங்களாலும் சந்த விருத்தங்களாலும் பாடப் பெறுவதாகும். பன்னிரு பாட்டியல் முதலிய பாட்டியல் நூல்கள் பிள்ளைத்தமிழ் இலக்கணத்தை விரிவாகக் கூறுகின்றன. குமரகுருபரர், சிவப்பிரகாசர், சிவஞான முனிவர், பகழிக் கூத்தர் முதலிய தமிழறிஞர் பலர் பிள்ளைத்தமிழ்களைப் பாடியுள்ளனர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சேக்கிழார் பிள்ளைத்தமிழ் முதலிய பல பிள்ளைத்தமிழ்களைப் பாடியுள்ளார். கொங்கு நாட்டில் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார், தவத்திரு. கந்தசாமி சுவாமிகள், கவியரசு நடேசகவுண்டர் முதலியோர் பல பிள்ளைத்தமிழ்களைப் பாடியுள்ளனர்.

தற்போது புலவர்.ஆ.காளியப்பன் புதிய முறையில் இலக்கண ஆசிரியர் தொல்காப்பியர் மேல் தொல்காப்பியர் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சேக்கிழார் பிள்ளைத் தமிழில் பெரியபுராணப் பாடல்கள் பலவற்றிற்கு விளக்கம் செய்துள்ளார். அதுபோல் காளியப்பன் தொல்காப்பிய நூற்பாக்கள் பலவற்றிற்குப் பொருள் செய்து காட்டியுள்ளார். தொட்ட இடமெல்லாம் தொல்காப்பிய நூற்பாக்களே வருகின்றன.

பேரூர் ஆதீனம் தவத்திரு.சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் கயிலைக் குருமணி தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தலைமையில் தொல்காப்பியர் தமிழ்ச்சங்கமம் அமைக்கப் பெற்றது. அதன் வழியாகத் தொல்காப்பியத்தைப் பரப்புவதைக் காளியப்பன் மேற்கொண்டு வருகின்றார். அச்செய்தியைப் பிள்ளைத் தமிழில் பதிவு செய்துள்ளார்

**''சாந்தையர் திருமடத்தைச் சார்ந்தே இருக்கும்**
**சாற்றுதிரு நின்பெயரால் இயங்கும் சங்கமம்''**

*(வாரனைப்பருவம். பா.1)*


‘‘திருவளர் பேரூர் சாந்த நாயகன்தன்
    திருமர போங்கிட வந்த குருமணி
திருவுளத்தால் விளைந்த தொல்காப்பியத் தமிழ்ச்
    சங்கமம் சலிப்பின்றி உழைப்பதை அறிவாயே’’

*(சிறுபறை.பா.3)*

‘‘கொங்கு நாட்டார் குலமணியாம் எங்கள்
    குலமது தழைக்க வந்த மாமணியாம்
செந்நிறமேனியில் வெண்ணீறு பூசியே
        சிறந்தோங்கும் இராமசாமி தொடங்கி வைத்த
            பங்கமில்லாப் பேரவை’’ *(சிறுதேர் பா.9)*

*எழுத்ததிகாரத்தில் முதல் நூற்பா முதல் உத்திகளைக் கூறும் நிறைவான நூற்பா வரை அனைத்தையும் தந்துள்ளார்.*

நன்மைப்புலஞ் சேர்நற்றமிழ்த் தொல்காப் பியத்தின்
தொன்மையிலக் கணத்தின் தொடர்பான செய்திகளைப்
பன்மைப்புலமைப் பயின்றாரும் காளியப்பன் பாங்காகச்
சொன்மைநலப் பிள்ளைத் தமிழ்ப்பாவில் சொற்றனரே.





**உலகத்தொல்காப்பிய மன்றம்,**

*நியூ செர்சி, அமெரிக்கா.*

# பாராட்டுரை

*தொல்காப்பியர் மயங்கா மரபுவழி தொகுத்தும், விளக்கியும் கூறியுள்ள தமிழ் இலக்கண இலக்கியக் கூறுகள் பற்பல. அச்சிறப்பான கூறுகளில் தலையாய ஒன்று பொருளதிகாரத்தில் கூறும் திணை வகைகள். தொல்காப்பியர் வகுத்த அகத்திணையின் கைக்கிளைக்குப் புறம் பாடாண் திணை. தொல்காப்பியர் அப்பாடாண் திணையின் பண்புகளை முறைப் படுத்துகையில் சான்றோர், வேந்தர்களைப் பாடும்போது அவர்களது காமத்தைப்பற்றியும் சார்த்துரைப்பது முறையே என்றும், அதேபோல், கருப்பொருள்களில் ஒன்றான கடவுளைப்பற்றிப் பாடும்போது, கடவுள் மீது கொள்ளும் காமத்தை (காதலை) நீக்காமல் பாடுதலும் இலக்கிய மரபே என்பதை*

**‘காமப் பகுதி கடவுளும் வரையார்**

**ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்‘ (பொ. புறம். 23)**

*என்று கூறியுள்ளார். மேலும், குழந்தையைத் தலைவன் வடிவமாக்கிப் பாடுதலும் அவ்வழி மரபே என்பதை*

**‘குழவி மருங்கினும் கிழவ தாகும்‘ (பொ. புறம். 24)**

*என்றும் கூறுவதன் வாயிலாக நாம் அறியலாம். இது பின்னர் எழுந்த சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான பிள்ளைத்தமிழ் பாடல்களுக்கு வழிகாட்டியது எனலாம். தொல்காப்பியருக்குச் சற்றொப்ப 14 நூற்றாண்டுகட்குப் பின் தோன்றிய பெரியாழ்வார் நாலாயிரத் திவ்வியப் பிரபந்த நூலில் திருமாலைப் பிள்ளையாகப் பாவித்துப் பாடிய பாடல்கள் பல உள்ளன. அப்பாடல்கள் பிறகாலப்*

*பிள்ளைத்தமிழ் நூல்களுக்கு ஒரு முன்னோடி என்று கருதப்படுகிறது. ஆனால் 12 ம் நூற்றாண்டில் சோழநாட்டில் வாழ்ந்த புகழ்மிக்க சைவத்தமிழ்ப் புலவர் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்தான் இலக்கண நெறியில் தமிழில் தோன்றிய முறையான முதலாவது பிள்ளைத்தமிழ் நூலாகும்.*

*பொதுவாகப் பிள்ளைத்தமிழ் நூல்களில் கடவுள், கவிஞர் அல்லது சான்றோர், வேந்தன், மக்கள்தலைவர்கள் ஆகியோரைப் பற்றிப்பாடுவது வழக்கம். பல்லாயிரம் ஆண்டுகளாய் மயங்கா மரபுவழி, மாண்புடன் வாழ்ந்துவரும் உலகச் செம்மொழியான நம் தமிழ் மொழியின் மயங்கா மரபுகாக்க இயற்றிய முதல் நூல் தொல்காப்பியமாகும். அதை இயற்றிய பெருமகனார் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனாரைப் போற்றும் பிள்ளைத்தமிழ் நூல்கள் இதுவரை இயற்றப் பட்டதாகத் தென்படவில்லை. அக்குறையைப் நீக்கித் தொல்காப்பியருக்கென்று பிள்ளைத்தமிழ் இயற்றிச் சிறப்பிப்பது நற்றமிழ் புலவர் பெருமக்களின் அனைவரின் நன்றிக்கடனாகும். அக்கடனைப் புலவர் தொல்காப்பியச் செம்மல் காளியப்பனார் ஐயா அவர்கள் செவ்வனே அழகாக ஆழமாகத் குடத்தேனுடன் நூறுபடி பால் கலந்தது போல் தொல்காப்பியக் கருத்துகள் பரவி நிற்கும் நூறு பாக்கள் கொண்ட தொல்காப்பியர் பிள்ளைத்தமிழ் எனும் சுவையான நூல் இயற்றித் தீர்த்துள்ளார் இன்று. இந்த இன்றியமையாத நூல் அவர் கோவைத் தொல்காப்பியர் மன்றத்தின் வாயிலாகவும், உலகத்தொல்காப்பிய மன்றத்தின் வாயிலாகவும் தொய்வின்றி, தொடர்ந்து தொல்காப்பியத்தை உலகுக்குப் பரப்பி வரும் நற்செயலை மேலும் மேன்மைப் படுத்துவதாக உள்ளது. இந்நூலைத் தமிழ்கூறும் நல்லுலக மக்களும், உலகளாவிப் புலம்பெயர்ந்து வாழும் ஏனைய தமிழர்களும் படித்து மகிழ்வார்கள், பயன் பெறுவார்கள் என்பது திண்ணம். இந்த அரிய நூலை வரவேற்று உலகத்தொல்காப்பிய மன்றத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியையும், வாழ்த்தையும் தெரிவித்து மகிழ்கிறேன்.*

| | |
|---|---|
| *நாள் : தொல்காப்பியர் ஆண்டு 2731,* | *அன்புடன்,* |
| *திருவள்ளுவராண்டு 2051,* | *முனைவர்* **நா.க.நிதி** |
| *மீனம் (பங்குனி),* | *தொல்காப்பியத் தொண்டன்,* |
| *(14.03.2021)* | *செயலர், உலகத்தொல்காப்பிய மன்றம்,* |
| | *நியூ செர்சி, அமெரிக்கா.* |



உ
சிறுத்தொண்டர் (எ) புலவர் **அ.சாமியப்பன்**
தலைமையாசிரியர் (ஓய்வு)
அசோகபுரம்.

# உண்மையில் பெற்றார் உயர்வு

''மலர்தலை உலகின் மாண்புறு நூலிது
வலம்வந்து வணங்கிடு வண்மை நூலிதே

தமிழ்மொழிக்கும் நமக்கும் பெருமை சேர்ப்பது
தமிழ்நூல் தொன்மையில் இலக்கணம்

அதுவே தொல்காப் பியமெனும் பெயரதாம்
அதன்பே ரதனில் பேரவை அமைத்திடும்

என்றே செப்பினார் பேரூர் நம் பெரியசாமீ
நன்றிது என்றுவந்து நம்காளி யப்பரும்

திங்களாம் முதலது ஞாயிற்றில் தொடர்ந்து
எங்கள் திருமடத்தின் வளாகத்தில் வளருது

தொல்காப் பியத்தொண்டர் தரணியில் புகழும்
தொல்காப் பியர்அருளும் தொண்டர்நம் காளியப்பர்

பெற்றார் அதனால் தொல்காப் பியர்பெயரில்
கற்றவர் போற்றிடும் நம்காளி யப்பர்தாம்

நடையது அறிந்த பிள்ளைத் தமிழது
படைத்தார் பெற்றார் மிகுபுகழ் வாழ்க!


## வெண்பா

''தொல்காப் பியசிந் தனையில்பல் நாள் தொலைத்தே
தொல்புகழ் பெற்றார்நம் காளியப்பர் - நல்லோர்
உவந்திடப் பிள்ளை உயர்தமிழ் ஆக்கினார்
உண்மையில் பெற்றார் உயர்வு''

தொல்காப்பியர் தமிழ்ச் சங்கமம்

அரசுப் பதிவு எண்.110/2018

# பணிவுரை



**வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்**
**பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து**
**பொலிமின்!** *(தொல்.பொருள்.செய்யுள்422)*

அன்னையும் அத்தனுமாய் ஆன்ற குருநாதருமாய், எம் கோனாகவும் வாழ்க்கைத் தூணாகவும் ஒளிரும், திருவருள் சேர்ந்த தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை தொல்காப்பியர் பேரவைத் தொடக்க நாயகர் பேரூர் ஆதீனம் 24 ஆம் பட்டம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் தாள் போற்றி

**திங்களொடு கங்கையைத் திருமுடியில் கொண்டான்**
**திருவடியைச் சிந்தையுள் வைத்த திருவாளர்**
**மங்கா வாழ்வுதனை மாநிலத்தார் பெற்றிட**
**மனதார வந்திக்கும் மாதவச் செல்வராம்**

எங்கள் குலக்குரு கயிலைப் புனிதர் பேரூர் ஆதீனம் 25 ஆம் பட்டம் தவத்திருமுனைவர் சாந்தலிங்க மருதாசல அடிகள் அவர்கள் அருள் வாழ்த்து வழங்கிச் சிறப்பித்து, நூல் வெளியீட்டு விழாவினையும் சிறப்புற நடத்தி வைக்கும். அன்னார் திருவடிகளுக்கு நன்றி மலர்களைப் படைக்கின்றேன்.

தொல்காப்பியர் பேரவைத் தொடக்கவிழாத் தொடங்கி ஒவ்வொரு ஆண்டுத் தொடக்க விழா அன்றும் அருளுரை வழங்கி வழி நடத்துவதோடு எளியேன் படைத்த இச்சிறு நூலுக்கும் வாழ்த்துரை வழங்கிப் பேரருள் புரிந்த சிரவை ஆதீனம் தவத்திரு முனைவர் குமரகுருபர் அடிகள் மலரடிகளுக்கு நன்றி மலர்களைச் சூட்டுகின்றேன்.

சித்திரம் வரைந்த பின்னும் சிற்பம் செதுக்கிய பின்னும் கண்திறத்தல் கடைசி நிகழ்வு. ஆயிர முகத்தான் அகன்ற நூற்கு அணிந்துரை என்பது கண் திறத்தலாகும். அதுவே நூற்பொருளின் திட்பத்தையும் நுட்பத்தையும் ஒப்பமுறச் செப்பும். அணிந்துரையைத் தன்னாசான் தருதல் மரபு அந்த அடிப்படையில்

**கலைபயில் தெளிவினோடு கட்டுரை வன்மையோடு**
**மலைநிலப் பெருமையோடு மலர்தரும் மணத்தினோடு**
**தொலைவிலா இன்பத்தோடு தோன்றிடும் புகழினோடு**

தலைமையே ஏற்றிடும் தண்டமிழ்ப் புலவர்க்கு எனும் சீரெலாம் கூடிய என்னாசான் பேராசிரியர் சைவத்திரு சென்னியப்பனார் அண்ணா அவர்கள் அணிந்துரை வழங்கியதோடு குறை களைந்து நிறைவு செய்து உதவினார் அன்னார் அவர்களுக்கு நன்றிகள்பல.

தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர். பல தமிழ் இலக்கியங்களுக்கும் உரையும் விளக்கமும் எழுதியவர் திருவள்ளுவர் தவச்சாலை நிறுவனர் 94 அகவை நிரம்பிய செந்தமிழ் அந்தணர் முதுமுனைவர் இரா.இளங்குமரானார் அவர்கள் இந்நூலுக்கு மதிப்புரை வழங்கி உள்ளார் அன்னார் அவர்களுக்கு என்மனமார்ந்த நன்றி.

அமெரிக்கா நியுசெர்சியில் இருந்தாலும் தொல்லுலகில் தொல்காப்பியம் பரவிடவே ஓயாது உழைத்திடும் நண்பர். tholkappiyam.org என்னும் இணைய தளம் மூலம் தொல்காப்பியம் தொடர்பான அனைத்து விளக்கங்களையும் உணர்த்திடும் உணர்வாளர். தொல்காப்பியர் சிலையை நிறுவிடவும் தொல்காப்பியர் பிள்ளைத்தமிழ் நூல் வெளிவரவும் பெரும் பொருள் கொடுத்து உதவியதோடு பாராட்டுரையும் வழங்கிச் சிறப்பித்த பேரறிவாளன் தொல்காப்பியத் தொண்டன் முனைவர் நாச்சி.க.நிதி ஐயா அவர்களுக்கு நன்றிகள் பல.

அன்பொழுகும் சொல்லாலே ஆதரவுக்கரம் நீட்டும் அண்ணன் சிவநெறித்தொண்டர் புலவர் சாமியப்பன் அவர்கள் இந்நூலுக்குப் பாராட்டு உரை வழங்கி சிறப்பித்துள்ளார். அன்னாருக்கும் நன்றி.

ஒவ்வொரு பாடலையும் அலைபேசி மூலமாகக் கேட்டுத் திருத்தியும் சூத்திரங்களை எடுத்தோதியும் நூல் முழுமை பெறப் பேருதவி புரிந்த முனைவர் உமாபதி ஐயா அவர்களுக்கும், புலனத்தின் வழியாக இப்பிள்ளைத் தமிழைப் படித்துப் பிழைதனைச் சுட்டியும் நலமதைப் பாராட்டியும் சிறப்புச் செய்த அனைத்துத் தமிழ்ச் சான்றோர்களுக்கும் நன்றி.

இந்நூலினை வடிவமைத்துச் சிறப்புற அச்சாக்கி நூலாக்கம் செய்து உதவிய சௌமி அச்சக உரிமையாளர் திருஞானசம்பந்தம் ஐயா அவர்களுக்கும் நன்றி.

மெய்ப்பிப்புப் பார்த்து உதவிய கவிச்சுடர் கா.உமாபதி அவர்களுக்கும் தட்டச்சுச் செய்து கொடுத்த வழக்கறிஞர் இந்துமதிராசேசு அவர்களுக்கும் பல்லாற்றானும் எனக்குத் துணைநின்று பேருதவி புரிந்த அம்சவேணி, பிரியா, சேந்தன்அமுதன் அவர்களுக்கும் இந்நூலைப் படித்துப் பாராட்டும் அனைவர்க்கும் என்நன்றி உரித்தாகட்டும்.

குழவிமருங்கினும் கிழவதாகும்(தொல்1030) என்று இலக்கணம் கூறிப் பிள்ளைத்தமிழ் நூல்கள் தோன்ற அடித்தளம் இட்ட தொல்காப்பியருக்குப் பிள்ளைத்தமிழ் வேண்டும் என்ற ஆர்வத்தால் எழுதப்பட்டதே இந்நூல். இந்நூலைப் படிப்போர் தொல்காப்பியம் பற்றியும் தொல்காப்பியர் பற்றியும் அறிந்து கொள்ள உதவும் முறையிலே எழுதப்பட்டுள்ளது. சிற்றெறும்பது நீர்கீறிச் சிந்து நதியைக் கடக்க முயல்வதைப் போல ஆழ்கடல் நீரை ஆழாக்குக் கொண்டு அளக்க முயன்றுள்ளேன். புலமிக்கோர் பிழைகளைச் சுட்டிக்காட்டின் நன்றியுடன். திருத்துவன்

நன்றி நன்றி நன்றி



இங்ஙனம்



தொல்காப்பியரே துணை! தொல்காப்பியமே வழிகாட்டி!

தொல்காப்பியச் செம்மல் புலவர்.ஆ.காளியப்பன் இயற்றிய

# ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் பிள்ளைத்தமிழ்

## காப்பு

உலகினில் மூத்தகுடி வாழ்வினை ஓதும்
அலகிலா நூற்கெலாம் ஆதி -- இலக்கணம்
சொல்லிய உன்றனது பிள்ளைத் தமிழுரைக்கத்
தொல்காப் பியாநீயே காப்பு.

## அவையடக்கம்

பிறவா யாக்கைப் பெரியோன் உளமகிழும்
பிள்ளை குறிஞ்சிக் கிழவன்
அறமுதல் மூன்றை ஆன்றோர்க் குரைத்த
அருந்தமிழ் மூன்றில் நானும்
திறனைந்து கற்றதொல்காப் பியன்பிள்ளைக் கவியைத்
திறனேதும் இல்லா அடியேன்
குறையா ஆசையால் கூறியதாய் எண்ணியே
கொள்வீர் கொள்கைச் சான்றீரே!.

## குரு வணக்கம்

மதிசேர் முடியனை நெஞ்சத்தில் எண்ணும்
பதியாம் மருதா சலக்கோ - விதியெனச்
சொன்னதை ஏற்பேன் சிரமேல்தான் என்றுமே
உன்னுவேன் உன்னடி நான்.



## 1. காப்புப் பருவம்

### தமிழ்த்தாய்

உலகினில் தோன்றிய மூத்த குடிமகன்
உந்தியில் பிறந்தவளே!
உயர்கோட்டுக் குமரியில் வாழ்ந்த மாந்தரின்
உள்நாத் தவழ்ந்தவளே!
சிலசில போழ்து சீறிய பேரலைச்
சிதைத்ததே உன்எழிலைச்
சீரிய மதுரையில்[1] தோன்றிய நூலெலாம்
இழந்தாய் என்தாயே
பலபல முயற்சியால் பாண்டியர் கண்ட
கபாட புரத்தினிலே
பைந்தமிழ்ச் செல்வன் தொல்காப் பியனைப்
பாருக்குத் தந்தவளே!
நிலமது நான்கின் ஒழுக்கம் ஐந்தை
நிலைப்பெறச் செய்தவளை
நீள்புகழ் கொண்ட என்னரும் தமிழே
நீடூழி காப்பாயே! 1

## நானிலத் தெய்வங்கள்

மலையும் காடும் மருதம் நெய்தலாம்
மன்பதை காத்தருளும்
முருகன் மாயோன் வேந்தன் வருணன்
முந்திய தெய்வங்களே!
அலைமகள் கலைமகள் அருந்திறல் கொற்றவை
ஆகிய தெய்வங்களே!
அருந்தமிழர் வாழ்வை அகம்புறமெனப் பிரித்த
அதங்கோட்டா சானுக்குணர்த்தி
இலைமறைக் காயாய் வீட்டினைக் குறிப்பாய்
இறந்ததன் பயனென்ற
இல்லற ஒழுக்கமே கற்பென்ற காப்பியனை
இனிதே காப்பீரே!
தலைமகன் தமிழர்க்குத் தண்டமிழ்க் குழந்தையைத்
தாவின்றிக் காப்பீரே!
தலைமைப் புலவன் தொல்காப்பினை என்றும்
தவறாது காப்பீரே! 2

தாவின்றி-அழிவு, குற்றம் தொல்காப்பியர் வீட்டைப்பற்றிக் கூறவில்லை



முல்லை - மாயோன்
குறிஞ்சி - சேயோன்
மருதம் - வேந்தன்
நெய்தல் - வருணன்

## ஐம்பெரும்பூதமே காக்க

அளப்பரிய வானமே அனைத்தும் அடக்கிய
அழகிய பால்வெளியே
அடிக்கும் திசைவழி நாற்பெயர்[3] பெற்ற
ஆற்றலுடைக் காற்றே
குளம்குட்டை கடலாறு குதித்துவரும் அருவியெனக்
கூறிடும் பெயர்பலவாய்க்
குறிஞ்சியில் தொடங்கி நெய்தலில் கலக்கும்
குளிர்ந்த தண்ணீரே
விளக்கில் ஒளிநீ வடதிசைத் தீ நீ
விசையுறு நெருப்பே
வேண்டி யோர்க்கும் தோண்டி யோர்க்கும்
வேளாண்மை[4] செய்நிலமே
உளத்தால் வணங்கினோம் ஐம்பெரும் பூதமே
உங்கள் குழந்தையை
உலகமே நீங்கள் கலந்த மயக்கமென
உரைத்தானைக் காத்திடுக! 3

---

3. காற்றின் பெயர்கள் வடக்கிலிருந்து வருவது வாடை, தெற்கு --தென்றல், மேற்கு--கோடை, கிழக்கு-- கொண்டல்

4. வேளாண்மை --- உதவி

---

### ஐம்பெரும்பூதங்கள்

நிலம்
நீர்
நெருப்பு
காற்று
வானம்



## ஆதிபகவன்

அகரமும் உகரமும் மகரமு மாகிய[5]
ஆதியே வாலறிவா!
அணுக்கர் மனதிலே மாணடி பதித்த
ஆசறு அருட்கடலே!
இகபர இன்பத்தை எல்லோர்க்கும் ஈந்திடும்
இருவினை அற்றவனே!
ஈடிலா உயிர்கள் வாழ இலங்கும்
பொறிவாயில் அவித்தவனே
தகதகவென மின்னிடும் தண்மதி ஞாயிறு
தாரகை ஒளிமூலமே!
தனக்குவமை இல்லாப் தனிப்பெரும் சோதியே
தொல்காப் பியமகவை
அகண்ட பிறவிக் கடலைக் கடக்கப் புணையாய்த்
திருவடி தந்தவனே!
அறிவனை அழிவில் இலக்கணம் தந்தானை
ஆதிபகவா காப்பாயே! 4

---

5. அகரமும் உகரமும் மகரமும் ஆகி -- ஓம் எனும் ஒலி (பிரணவ மந்திரம்)

---

ௐ



**திருவள்ளுவர்**

தொல்காப் பியத்தைத் தொட்டுப் படித்த
திருவள்ளுவப் பெருந்தகையே!
தொடக்கக் குறளில் தொல்காப்பி யத்தைத்
தொழுது வைத்தவனே[6]
பல்காப் பியரும் போற்றினர் உம்மைப்
பாமாலை சூட்டியுமே[7]
பழந்தமிழ் நூலில் பதித்தனர் உம்மொழி
பாரினை ஆள்பவரே!
பல்சமயத் தாரும் என்னவர் என்றே
எடுத்தாண்டு மகிழ்ந்தார்கள்
பகுத்தாய் அறமுதல் மூன்றாய் நூலைப்
பாவலர்க்கு மூத்தவனே
இல்லற வாழ்வே ஏற்ற மென்றீர்
எனவே வள்ளுவரே
என்னருங் குழந்தையை முப்பால் ஊட்டி
என்றும் காப்பீரே! 5

---

6 தொல்காப்பியம் முதல் நூற்பா எழுத்து எனப்படுப

அகரம் முதல் னகரம் இறுவாய் முப்பஃது என்ப சார்ந்து வரல்மரபின்
மூன்று அலங்கடையே திருக்குறள் முதற் குறள்
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

ஏழுசொற்களில் நான்குசொற்கள் தொல்காப்பியச் சொற்கள்

7. திருவள்ளுவமாலை

## சங்கப் புலவர்


முத்தமிழ் வளர்த்த முச்சங்கப் புலவரும்
முனைவரும், முறுவலால்
[7]முப்புரம் எரித்த விரிசடைக் கடவுளும்
முருகப் பெருமானும்
பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்
பகன்ற பாவலரும்
பன்னிரு திருமுறை ஆழ்வார் ஆகிய
பன்னிருவர் பாசுரமும்
சித்தர் திருமூலர் தத்துவ முரைக்கும்
சிவஞான போதமும்
சிலம்பு முதலாய ஐம்பெருங் காப்பியம்
சிற்றிலக்கியம் ஈந்தோரும்
பத்துப் பொருத்தம்[8] பார்த்தே உரைத்த
பைந்தமிழ்க் காப்பியனைப்
பாண்டியர் காத்த சங்கப் புலவீரே
பரிவுடன் காப்பீரே! 6

---

7. முதற்சங்கத்தில் இருந்த புலவர்கள் இறையனார் களவியல் உரைகொண்டு எழுதப்பட்டது 8 தொல் சூத்1219

---





## உலகத் தொல்காப்பிய மன்றமே காக்க

கல்லாத மாந்தரும் கற்றறிய வேண்டுமெனக்
கங்கணம் கட்டி உழைத்திடும்
க.நிதி முதலாய் உமாபதி ஈறாய்க்
காளி யப்பனும் கூடியே
எல்லா நாட்டிலும் தொல்காப்பியர் புகழ்பரப்பும்
உலகத் தொல்காப்பிய மன்றமுடன்
இணைந்து செயல்புரிதொல் காப்பியர்தமிழ்ச் சங்கமுமே
எடுத்துப் பேசும் தொன்னூலை
மல்லமா ஞாலத்தில் மாந்தர் வாழ்வை
மாண்புற வாழ உரைத்தாரை
மரமும் புல்லும் ஓரறிவுயி ரென்றவரை
மனத்தொடு சேர்ந்தது ஆறறிவாம்★
இல்லைதான் குறையிதில் எழுத்தொடு சொல்லையும்
பொருளையும் உரைத்த குழவியை
எண்டிசை எங்கும் கொண்டு சென்று
இசைபட வைத்துக் காப்பீரே 7

---

★ கங்கணம் கட்டி - உறுதி பூண்டு- தொல் - 1526

---

## பலநாடு பரவிய தமிழர்

உலகம் முழுவதும் உழைப்பினைத் தேடிப்
பரவிய தமிழரெலாம்
ஒருங்கு கூடி அன்னைத் தமிழை
ஓங்கி வளர்ப்பவரே
பலபல சங்கம் பாரில் வைத்தே
பாங்குடன் வளர்ப்பவரே
பற்பல நாட்டில் புலனத்தின் வழியாய்ப்
பைந்தமிழ் வளர்ப்பவரே
நிலமுள தமிழர் நெருங்கிக் கூடியே
நிலந்தரு திருவிற்
பாண்டியன் அவையில் தோன்றிய காப்பியத்தை
பாங்காய்க் காப்பீரே!
திலகமாய்ப் பாருக்குத் திகழ்ந்தொல் காப்பியரைத்
திசைதொறும் காப்பீரே
தமிழ்த்தாய்த் தலைமகன் தொல்காப் பியரைத்
தரணியில் காப்பீரே! 8





## ஆய்வாளர்களே காக்க

குன்று முட்டிய குருவியாய்த் திணறும்
கூடியே படிப்போர்க் கெல்லாம்
நன்றாய் விளங்க நல்கினர் உரையை
நச்சினார்க் கினியர் இளம்பூரணர்
இன்றில்லா வடநூற் கடலின் கரைகண்ட
சேனா வரையர் கல்லாடனார்
இளங்குமரனார் வாரணார் பேராசியர் வ.உ.சி
எண்ணற்றோர் செய்தார் உரைதனைப்
பன்னெடுங் காலம் பலரும் ஆய்ந்து
பெரும்புகழ்த் தொல்காப் பியத்தைப்
பகுத்தாயும் புலவரும் பல்கலைக் கழகங்களும்
பைந்தமிழ் ஆய்வரும் ஆர்வலரும்
இன்றைய மக்கள் எல்லோரும் அறிந்திட
இயன்றன செய்து காத்திடுக
இனிய தொல்காப்பியம் மேன்மை யுறவே
என்றும் கூடிக் காப்பீரே 9

வாரணர்- வெள்ளைவாரணனார்

---





தொல்காப்பியரே துணை

அதிகாரம் தோறும் ஒன்பது இயல்களை
அளந்து வைத்தவனே!
ஆயிரத்து அறுநூற்று பதினொரு நூற்பா
அள்ளிக் கொடுத்தவனே!
பதிகம் தன்னைப் பனம்பார னார்பாடப்
பல்புகழ் நிறுத்தவனே!
பைந்தமிழ்ப் புலவரைப் பக்கத் துணையாய்ப்
பலவிடம் காட்டியவா!
விதியிது என்று விளக்கிக் கூறியே
[1] வினையும் பெயரும்
அவ்விரண்டே சொல்லென வகுத்துக் காட்டியவா
[2] இடையுரியைச் சார்பென்றவா
[3] குதிரை ஒட்டகம் குறித்து இளமையைக்
கூறினாய் மரபியலில்
கூறிய இலக்கணம் அனைத்தையும் நீயே
குறைவின்றிக் காப்பாயே!

1. தொல் - 643

2. தொல் - 644

3. தொல் - 1511, 1517



## உ. செங்கீரைப் பருவம்

மரபினைக் காக்கவே எழுத்தின் தொகையை
முதலும் சார்பாம் முப்பத்து மூன்றே
முடிவென உரைத்து நூல்மரபு தொடங்கியவா![1]
மாத்திரை முதலாய் மயக்கம் ஈறாய்
வரவுள்ள எழுத்தினை வகையாய்ச் செய்தவனே!
வருவது அளபெடை யாப்பில் என்றாயே [2]
வகையாய் மொழியில் வருகின்ற எழுத்தின்
இயக்கம் செப்பிப் போலியும் கூறியவா
நரர்போல் எழுத்துக்கும் பிறப்புண் டென்றே
நவின்றனை பிறப்பியல் புணரியல் தன்னோடு
நடைக்கொருமுறை புறநடை கூறிச் சென்றவனே!
நற்தொகை மரபுருபியல் நவின்ற நல்லோனே
சுரர்பலர் வாழும் சொர்க்கம் வேண்டேன்
சொல்லும் இலக்கணம் போதும் காப்பியனே!
சுற்றிச் சுற்றிசுழன் றாடுக செங்கீரை
சொல்லி மகிழ்கிறோம் ஆடுக செங்கீரை 1

---

1. நூற்பா - 1

2. நூற்பா - 33

மயக்கம் கொள்ளும் மானிடர் போல
மயங்கும் மெய்யுயிர் தானே என்றவனே
மூவகை ஒற்றும் இருவகை உயிரும்
முதலிடை கடையின் மயக்க முரைத்தவனே
அயலெழுத்தாய் எவையெவை வருமெனக் கூறி
அவற்றொடு குற்றிய லுகரத்தை வைத்தவா
அத்துடன் எழுத்ததி காரத்தை முடித்தவா
அசைந்து அசைந்து ஆடுக செங்கீரை
பெயரொடு வினையிடை உரியெனச் சொல்லென்றாய்
இயல்புடை வேற்றுமை அல்வழி என்றவனே
பெயரேற்கும் வேற்றுமை ஏழோடு விளியைப்
பேசியவா அசைந்து ஆடுக செங்கீரை
இயலது ஒன்பதைக் கிளவியாக்கம் முதலாய்
எச்சவியல் ஈறாய் சொல்லதிகா ரமாக்கியவா
செழித்த செங்கீரை ஆடுவ போல
சிறந்து நீயும் ஆடுக செங்கீரை 2



பொருளுக் காகவே எழுத்தையும் சொல்லையும்
பொருந்தச் சொன்னதாய்ப் புகன்றனர் பெரியோர்கள்
பொருளுடை வாழ்வைப் பொருளியல் உரைக்கும்
பொற்புடை மாந்தர் புகழினைப் பெற்றிடவே
பெருந்திணை ஈறாய் கைக்கிளை முதலாய்ப்
பெருமையுறு ஐந்திணை அகத்திணை என்றவனே
புறத்திணை ஏழையும் பொருந்தக் கூறியே
புறங்கை ஏழெனில் அகங்கை ஏழென்றாய்
பொருளியல் முன்னே களவியல் கற்பியல்
பின்னே வருவது மெய்ப்பாடு என்றாயே
உறுபுகழ் உவமையொடு செய்யுளியல் செப்பியவா
ஓங்கிய மரபியல் ஒன்றையும் வைத்தவனே
அருளது கொண்டு இயல்இருபத் தேழை
அள்ளிக் கொடுத்தவா ஆடுக செங்கீரை
அருந்தமிழ் மரபினை அழியாமல் காத்தவா
அருமைக் குழந்தையே ஆடுக செங்கீரை 3



எள்ளில்  இருந்தே எண்ணெய் எடுப்பர்

இயற்கையும் இதுதானே

இலக்கியம் கண்டே இலக்கணம் இயம்புவர்

என்பதும் அதுபோலே

கள்ளது உண்ணும் வண்டுங் கூட

கனிதரும்  மலர்நாடும்

கடலெனப் பெருகிய இலக்கண இலக்கியம்

கற்றுத் தெளிந்தவனே

உள்ளதை எல்லாம் ஒன்றாய்த் திரட்டி

உறுநூல் ஆக்கியவா!

உன்னுடன் உதித்த நூலெலாம் ஒழிய

என்றும் நிலைத்தவனே!

துள்ளிய ஆழிப் பேரலை வந்தபோதும்


துளியும் சிதையாது

தொல்காப்பியம் என்னும் நூலைத் தந்தவனே!

ஆடுக செங்கீரை 4



மெய்யை விட்டே உயிரும் நீங்கின்
மெய்தான் இயங்காது
மெய்தான் இன்றி உயிர்தனித் தியங்கும்
உயர்ந்த தத்துவத்தின்
மெய்யை உணர்ந்து எழுத்திற்குப் பெயரை
வைத்த காப்பியனே!
மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா
மேன்மையை உரைத்தவனே!
பொய்யான கதையை நச்சர் நவின்றதைப்
பொறுத்தது இவ்வுலகம்
மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையாம்
மெய்யியல் உணர்ந்தவனே
வையக மாந்தர் வாழும் முறையை
வகையாய் உரைத்தவனே
வள்ளுவர் உன்னை உள்ளத்தில் வைத்தார்
ஆடுக செங்கீரை 5



கற்களைந்து அரிசியை ஆக்குதல் போல
கிளவி ஆக்கத்தில்
சொற்களின் வழுவை நீக்கி வடித்தாய்
சொல்லின் இலக்கணத்தை
விற்கை விசயன் எடுத்த அலியுரு ★
பேடி[1] என்றவனே!
விளங்கும் இருதிணை ஐம்பால் மூவிடம்
விளக்கி உரைத்தவனே!
சொற்களின் வகையில் செப்பும் வினாவும்
சேர்த்தாய் இலக்கணமாய்ச்
சொற்களில் பால்பிரிந்து இசையாச் சொல்லும்
உண்டெனச் சொன்னவனே!
பற்பல எண்ணின் புணர்ச்சி எல்லாம்
பாங்குறப் பகன்றவனே!
பைந்தமிழ்ப் புலவர் பார்த்து மகிழ
ஆடுக செங்கீரை 6

---

1. மறை வாழ்க்கையில் அருச்சுனன் பேடி வடிவில் இருந்தான் - மகாபாரதம்

---



வேற்றுமை பற்றி விரிவாய் உரைக்க
இயல்மூன்று[2] செய்தவனே!
விடுபட்ட இலக்கணம் எல்லாம் சேர்த்து
எச்சவியல் என்றாயே
ஆற்றில் கரைத்த புளியாய் ஆக்கினோம்
ஐயாஉன் இலக்கணத்தை
ஆங்கில மோகம் ஆட்டிப் படைக்க
அருந்தமிழ் மறந்தோமே
நாற்றுப் பள்ளியில் நம்தமிழ்க் குழந்தையை
நாங்களும் சேர்த்தோமே
நம்தாய் மொழியை மறந்து நாளும்
நாசம் செய்தோமே
மாற்றம் காண உன்னை அன்றி
மானிடர் இனியிலையே
மாமுனி நீயே மன்னித்து எங்களை
ஆடுக செங்கீரை 7


---

2. வேற்றுமையியல், வேற்றுமைமயங்கியல், விளிமரபு மூன்று இயல்கள் வேற்றுமை பற்றி உரைக்கின்றன


---

புணர்ச்சியின் போது ஏற்படும் மாற்றம்
மூன்றே என்றவனே !
புதிதாய்த் தோன்றியும் மறைந்தும் திரிந்தும்
இயல்பாய் வருமென்றாய்
பிணமாம் வடமொழி எழுதும் முறைக்கும்
இலக்கணம் வகுத்தவனே!
பின்னால் வந்தோர் உரையென்ற பெயரால்
நடுங்க வைத்தார்கள்
குணமது கொண்ட கொள்கைச் சான்றோர்
கூடி வளர்த்தார்கள்
குன்றிலிட்ட விளக்கென ஒளிரும் முதல்வா
குதித்தாடுக செங்கீரை
சுணக்க மின்றிக் கற்றோ ரெல்லாம்
உயர்புகழ் பெற்றார்கள்
சுருதிக்கும் மேலாய்க் காப்பியம் தந்தவா
ஆடுக செங்கீரை ௪

இலக்கணம் பெற்ற இன்றமிழ் மூன்றிற்கு
இல்லைநிகர் இப்புவிதனிலே
உனக்குமுன் உளவெலாம் ஆழியில் அழிந்திட
ஒருதனி நிற்பவனே
உலகிலே கிடைத்துள நூல்களில் மூத்ததாய்
உளதே இன்றளவும்
உண்மையில் வடமொழி உனக்குப் பின்தான்
உரவோர் அறிவார்கள்
பலவும் நிறைந்த பனுவல் தெரிந்து
பாண்டியன் அவையத்திலே
பன்னூல் அறிவால் தொகுத்துத் தந்தது
பழுதற்ற உன்நூலே
நிலவும் வானும் உளநாள் நிலத்தில்
நீடித்து வாழ்வாயே
நீயே எங்கள் உள்ளம் குளிர
ஆடுக செங்கீரை 9



எழுத்து சொல்லெனப் பொருளொடு செய்யுளணி
எனவைந்தைச் செப்பியவா
எழுதினர் வழிநூல் இலக்கண வல்லார்
தனிநூல் ஆக்கினரே
முழுதுணர் திறமதை முழுமையாய்ப் பெற்றிட
மூத்தோர் உரைவகுத்தார்
முழுவதும் கற்றோர் மொழித்திறன் பெற்று
மன்னினர் மாநிலத்தில்
புழுவொடு தாவரம் பெற்றுள அறிவினைப்
பிரித்து உரைத்தவனே
பொறிகளை வைத்து புலந்தனைப் பகுத்துப்
போற்றினாய் மரபினையே
தொழுதுனை வாழ்த்தியே தொடர்ந்தோம் உம்வழி
ஆடுக செங்கீரை
துணையாய் இருந்து மொழியைக் காத்தவா
ஆடுக செங்கீரை 10





## 3. தாலாட்டு

உந்தி முதலா முந்துவளித் தோன்றி
உரசு நாவால் தோன்றிய ஒலியே
செந்தமிழ் எழுத்தெனச் செப்பினர் புலவர்
சேர்த்தே பாடினர் உன்னைத் தாலாட்டி
முந்தித் தாயே கற்றிடச் செய்தாள்
முக்கனி மொழியைத் தாலாட்டி என்றும்
தீந்தமிழுக்(கு) இலக்கணம் ஆனது தாலாட்டு
தீதறக் கற்றனர் தெளிந்து புலவோர்கள்
முந்தையர் எகுலத்தின் பெருமை யோடு
முன்னோர் வாழ்வியல் நெறிமுறை கூறி
சந்தவிசை பாடி ஆட்டினர் தொட்டிலையே
சிறுகண் மூடி சிறுவா உறங்காயோ
அந்தமிலா ஐவகை இலக்கணம் உரைத்தவனே
அதங்கோட் டாசாற்கு அரில்தப உணர்த்தியவா
செந்நாப் போதார் உன்வழிக் குறளை
உரைக்கச் செய்தவா தாலோ தாலேலோ 1

தமிழர் வாழ்வைக் களவு கற்பெனத்

தனித்தனி பிரித்துத் துறைபல தந்தவனே!

தண்டமிழ் நிலத்தை நான்காய்ப் பிரித்துத்

தனித்தே ஐவகை ஒழுக்கத்தை நிறுத்தியவா

தமிழர் பெருமையைத் தரணிக்கு உரைத்தவா!

தலைவன் தலைவி அறத்தொடு நிற்றலும்

தோழியும் பாங்கனும் உற்றிடத் துதவலும்

தாயர் இருவர் தன்மை உரைத்தவனே!

இமிழ்கடல் சீற்றத்தால் இறந்தன நூலெலாம்

எனினும் உன்நூல் இறவாது மீண்டதே

இடைகடைச் சங்கத்தார்க்கு இலக்கணம் தந்தவா

எங்கள் காப்பியா தாலோ தாலேலோ

அமிழ்தாம் தமிழுக்கு அரணாய் உள்ளவா

ஐவகை நிலத்தின் தெய்வம் உரைத்தவா

அணிக்குத் தலைமை உவமை என்றவா

அனைத்தும் அறிந்தவா தாலோ தாலேலோ 2



பிரிவுகள் என்பது பாலையின் உரிப்பொருள்
களவிலும் கற்பிலும் இருவேறு நிலையிலும்
பிரிவுக்கு இலக்கணம் பற்பல சொன்னவனே!
பொருள்வயிற் பிரிதலும் உண்டென மொழிந்தவனே!
உரித்தென மொழிந்தாய் ஓதலும் காவலும்
உயர்ந்த தூதும் ஒருவழி உண்டென்றாய்
உரிய காலத்தை ஓதினாய் அன்றே
ஒருவழித் தணத்தலும் உடந்தான் ஓதியவா
உரிமை கோரார் உயர்ந்த மங்கையர்
மடல்மேல் ஏறவும் கடல்மேற் செல்லவும்
உடன்போக்கும் ஒருவகைப் பிரிவாய் உரைத்தவனே!
உள்ளம் உவக்க தாலோ தாலேலோ
பரத்தையர் பிரிவால் ஊடலும் வந்தால்
பற்பல வாயில்கள் பலவாய்த் தேற்றுவதைப்
பலவகை மொழியால் பாங்காய் உரைத்தவா
பாரோர் மகிழத் தாலோ தாலேலோ 3



ஒலியைக் கணக்கிட உரைத்தாய் மாத்திரை
        ஒருவிர லோடு பெருவிரல் சேர்த்து
    ஓசை செய்தல் ஒருமாத் திரையாம்
        ஒருவர் இயல்பாய்க் கண்ணிமைத் தலுமாம்
ஒலிக்கும் மாத்திரை ஒருநான்கு கூறாம்
        ஒலிக்க மனதால் நினைத்தல் காலாம்
    ஊன்றல் அரையே முறுக்கல் முக்கால்
        விடுத்தல் ஒன்றென விளம்பினர் தமிழர்
ஒலிக்கும் எழுத்தைக் குறில்நெடில் ஒற்றென
        ஒலிக்கும் அலகால் ஒருபெயர் வைத்தவனே
    ஒன்றே குறிலாம் இரண்டே நெடிலாம்
        ஒற்றே அரையென ஓதிய புலவன்நீ
வலிமெலி இடையென வகுத்தாய் எழுத்தினை
        வாய்பாட்டில் நீளும் எழுத்தின் இலக்கணம்
    வருமிசை நூலில் காண்க என்றவனே
        வல்லோர் மகிழத் தாலோ தாலேலோ 4



எல்லா எழுத்தும் பிறக்கும் இடமும்
எடுக்கும் முயற்சியும் தொகுத்துச் சொல்லியவா!
எண்ணிய சார்பாய் இருக்கும் மூன்றும்
அதனதன் முதலே அடிப்படை என்றவனே!
எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரும் என்றவனே!
அகத்தெழு வழிஇசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறையென்றாய்
எல்லா எழுத்திலும் இருபத்தி ரண்டே
சொல்லுக்கு முதலாம் என்று சொல்லியவா
இருபத்து நான்கே இறுதியில் வருவதொடு
இடைநிலை மயக்கமும் இயம்பிய காப்பியனே
எல்லாப் புணர்ச்சியும் இயையும் போது
இடையில் சாரியை வருவதை உரைத்தாயே
எல்லாம் தொகுத்துத் தொகைமரபு உரைத்தவா
எல்லாரும் மகிழத் தாலோ தாலேலோ 5



எல்லா ஈற்றுக்கும் சாரியை உரைத்து
இருவகைப் புணர்ச்சிக்கும் இலக்கணம்
இயம்பியவா!
இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வல்லெழுத்து மிகமென இலக்கணம் வகுத்தவனே!
எல்லாப் பருவத்தும் உழைத்தான் என்பதைப்
பனிவளி வெயில்மழை யுடன்அத்துச் சாரியை
இயைந்து வருமென எடுத்துக் காட்டியவா
இலக்கணத் தூடே பண்பாடு பகன்றவா
எல்லாச் சொல்லிலும் எகரமும் ஒகரமும்
ஈற்றினில் வாராது என்று இயம்பியவா
எல்லா ஈறுக்கும் எடுத்துக் காட்டுடன்
இலக்கணம் சொன்னாய்த் தாலோ தாலேலோ
நல்லது அல்லாச் சொல்லுக்குக் கூட
நற்றமிழில் இடக்கர் அடக்கல் என்றவனே
நல்லதல்லா மலத்தைப் ‘பகரஈ’ என்றவனே!
நாங்கள் மகிழத் தாலோ தாலேலோ 6



எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டலென

எல்லா அளவையும் எடுத்துச் சொன்னவனே!

எள்ளையும் கொள்ளையும் நெல்லையும் குறித்தே

எல்லா நிலத்தார் உணவைக் கூறியவா

கண்ணியும் மாலையும் தாரும் பூத்தானே

கழுத்திலும் மார்பிலும் அணிகையில் பெயர் வேறாம்

காலம் இடத்திற்கு முன்பின் பொதுவெனக்

காட்டிய காப்பியனே தாலோ தாலேலோ

விண்ணும் மண்ணும் வளியொடு நெருப்பும்

வான்மழை நீரும் கலந்த உலகத்தில்

பெண்ணும் ஆணும் நீங்கிய அலியைப்

பேடியெனக் கூறி மரபினைப் போற்றியவா

பெண்ணைப் பெற்றோர் கொடுப்பக் கொள்ளாது

பாங்கன் பாங்கியைத் தூதாய் விடுத்துப்

பெண்ணுடன் போதல் உடன்போக் காமெனப்

பேசிய காப்பியா தாலோ தாலேலோ 7

ஈருயிர் சேர்ந்தால் இடையில் தோன்றும்
எழுத்தைக் கூட 'ய்.வ்'[1] என்றவனே[2]
எழுதும் போது மகரம் வரும்முறை
உட்பெறு புள்ளி உருவாகும் என்றவனே
ஆரிய மொழியை அண்ட விடாது
அன்றே காத்தவனே அதையும் மீறினால்
அம்மொழிக் கிளவி அவ்வெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும் என்றவனே
[3]சீரிய புலவர் அவையில் கேட்டத்
தடைக்கு விடையைத் தகும்படி உரைத்தவனே!
திருவிற் பாண்டியன் திருமுன் அரங்கேற்றத்
தொடங்கிய காப்பியா தாலோ தாலேலோ
[4]ஊரொடு தோற்றம் உரித்தென மொழிந்து
உலாத்தோன்ற ஒருவித் திட்டவனே உன்னை
ஊரில் உள்ளத்தேரில் வைத்து இழுப்போம்
உள்ளம் மகிழ்ந்து தாலோ தாலேலோ 8

1. நூற்பா - 140
2. நூற்பா - 884
3. பாயிரம்
4. நூற்பா - 1031

ஒன்பதின் மீதுனக்கு நாட்டம் உள்ளதால்
ஓரதி காரத்தை ஒன்பதியல் ஆக்கினையோ
ஓராயிரத் தறுநூற்று பதினொரு நூற்பா
உரைத்தாய் என்றே ஒத்துக் கொண்டோமே
ஒன்பதி னோடு ஒருநூறு ஆயிரம்[1]
ஒட்டி வருவதை உரைத்தாய் இலக்கணத்தால்
தொண்ணூறு தொள்ளா யிரமாகும் முறையைத்
துளைந்து உரைத்த தொல்காப் பியனே
நன்றாய்ச் சோற்றை ஆக்கல் போல
நவின்றாய் இலக்கணம் கிளவி ஆக்கத்தில்
நம்தமிழ் வாழ நல்லரண் அமைத்த
நற்றமிழ்ப் புலவா தாலோ தாலேலோ
உந்தன் நூலை நூலெனத் தொடங்கி
நூலென முடித்த நுனித்தகு புலவோனே
உனக்கீடாய் இனியொரு நூலைப் படைக்க
உள்ளா ரிலையே தாலோ தாலேலோ ௯

1. நூற்பா - 463

[1]களவல ராயினும் காமத்துப் படினும்
கண்ட ஊரார் காதொடு பேசினும்
கட்டினும் கழங்கினும் வெறியாட்டு அயர்தலும்
செவிலி கூற்று நிகழும் என்றவனே
களவில் பழகிய காதலர் இருவர்
காவிலும் பூம்பொழில் சோலையில் சேர்ந்தே
கனவில் மிதந்தது போதுமென்றே கற்புக்காகக்
கடிமணம் புரிவர் என்று சொன்னவனே
[2]அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத லாகி
உளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தென
அகரஉகரம் கசதப நமவ என்றவனே!
அனைத்தும் அடக்கி இலக்கியம் சொன்னவனே
உளமகிழ்ந் துன்னைப் போற்றினோம் ஐயனே
உவந்து நீயும் தாலோ தாலேலோ
ஒருபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்கா
பெற்றோம் உன்னைத் தாலோ தாலேலோ 10

1. நூற்பா - 1061

2. நூற்பா - 170



## 4. சப்பாணிப் பருவம்

நற்றாய்த் தோழியே நலமிகு செவிலி
நம்தலைவி தோழியும் அவள்மகள் தானே
நள்ளிரவு பகலெனக் குறிதனைக் கூறியே
நற்றலைவன் தன்னை நாடிவரச் செய்வாள்
பெற்றவர் அறியாது பேணியே தலைவியின்
பொன்னிற மேனியில் தோன்றிடும் பொலிவால்
புணர்ச்சி எதிர்ப்பாடு புலனால் உணர்ந்தவள்
புத்திகூர் தோழியின் பெருமையை உரைத்தவா
[1]நற்றவம் என்பது காட்டினை நண்ணாது
நன்றாம் காமத்தை நாளும் நுகர்ந்தபின்
நற்பெயரர் சூழவே நல்லபடி வாழவே
நல்லறஞ் செப்பலே நற்றவம் என்றவா
பெற்றோர் கொடுத்துக் கொள்வது அன்றியும்
பேசியே இருவரும் உடன்போக்கு நிகழ்த்தியும்
வரைதல் உண்டென வகையாய் உரைத்தவா
வலமிடக் கரம்சேர்த்துச் சப்பாணி கொட்டுகவே 1

1. நூற்பா - 1138

இற்செரிப்பு[1]ச் செய்து இடர்வந்த போதும்
இளவல்கள்[2] இயக்கம் இருந்த போதும்
இன்முகத் தோழியின் இணக்கத்தால் என்றும்
இனிய காதல் வளரும் என்றவா
[3]கற்பெனப் படுவது கணவன் மனைவியாய்க்
கரணத்தால் ஆகிய காதல் வாழ்க்கையே
கொளற்குரி மரபிற் குலமகன் பெண்ணினைக்
கொடைக்குரி மரபினர் கொடுப்பக் கொள்வதே
கற்பென் பதனையே காரிகைமேற் காட்டிக்
கருத்தற்றப் பொருள்கொண்டார் கறுமனம் கொண்டார்
கற்பெனும் திண்மையை வள்ளுவரும் சொன்னாரே
களவினைக் நீக்கியே கற்பினுக்கு வாஎன்றவா
அற்றம் காக்கும் அறிவாலே அனைத்தும்
அறிந்தவா சப்பாணி கொட்டி யருளே
அறனெனப் பட்டதே கற்புநெறி என்றவா
அழகாகச் சப்பாணி கொட்டி யருளே 2

---

*1.* வெளியே செல்லதடை *2.* தன்னுடன்பிறந்தோர்
*3.* நூற்பா - *1088*

காதலித்த பெண்ணைக் காணாது விடுதலும்
கட்டிய மனைவியைக் கைகழுவி விடுதலும்
[1]காளையர் மனத்தில் பொய்யும் வழுவும்
காலக் கொடுமையால் கணக்கின்றிப் போனதே
பேதலித்துப் பெண்ணினம் பெருந்துயர் உற்றதால்
பெரியவர் கூடியே பேசினர் திருமணம்
தழையும் ஓலையும் தாலியாய்க் கட்டிய
தன்மையைச் சொன்னவா கொட்டுக சப்பாணி
ஈதலால் இசைவரும் என்றதால் மன்னரும்
இரும்பொருள் ஈந்தனர் இரவலர் தனக்கு
ஈத்துவக்கும் இன்பத்தை இலக்கணமாய் இயம்பிய
எங்கள் காப்பியா கொட்டுக சப்பாணி
காதலர் இருவரும் கூடிக் களிக்கையில்
கண்ணியம் மீறாக் காதலை உரைத்தவா
கணிகையர் கூட்டமும் உண்டென மொழிந்த
காப்பியா சப்பாணி கொட்டி யருளே 3

---

*1. நூற்பா - 1099*



[1]நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
நவிலும் காலை அகத்திணை ஐந்தையும்
நற்கலி பரிபாட்டில் நவிலச் சொன்னவனே!
தேடாது அழிக்கின் பாடாய் முடிவதால்
தேடியே பொருளை ஈட்டுக என்றவனே!
தெப்பமாம் கலத்திலும் காலிலும் தேடும்
தேட்டப் பிரிவினைப் பாலைக்கு ஆக்கியவா
[2]கோடுடை யானையைக் களிறெனக் கூறிக்
கூடவே உள்ளபெண்ணைப் [3]பிடியே என்றவனே!
குட்டியும் குருளையும் கன்றும் பிள்ளையும்
குழந்தை விலங்கின் இளமை என்றவனே!
[4]பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
பிணையும் பிணவும் பாட்டியும் ஆகிய
பெண்மைக் குரிய பெயராய்க் குறித்தவா
பெருமையாய்ச் சப்பாணி கொட்டி யருளே 4

1. நூற்பா - 999

2. நூற்பா - 1533

3. நூற்பா - 1551

4. நூற்பா - 1502



[1]தொட்டால் உணர்வது ஓரறிவு உயிரே
தொடுதலொடு நாவைப் பெற்றது ஈரறிவே
தொடுதல் சுவைத்தல் முகர்தலும் மூன்றாம்
துளையுடை கண்ணும் காதும்நான் கைந்தாகும்
பட்டறிவு மிக்கது பகரும் மனமாம்
பகுத்தறிவு கொண்டது ஆறாம் அறிவெனப்
பகுத்தாய்ந்து உரைத்தனர் பண்புடை யாளரெனப்
பாடம் சொன்னவா பாவலர் காவலா
அட்டை கரையான் ஆற்றில்வாழ் நண்டு
அனைத்தையும் சான்றாய்க் காட்டி உரைத்தவா!
அரிதிலும் அரிதான மானிடப் பிறவியின்
அகப்புற வாழ்வினை அரில்தபக் காட்டிவா
மட்டூர் மலரின் பருவம் ஏழொடு
[2]மரத்தின் உறுப்பை இலையே தளிரே
முறியே கோடே அரும்பே என்றவா!
மகிழ்ந்துநீ சப்பாணி கொட்டி யருளே 5

1. நூற்பா - 1526
2. நூற்பா - 1587



[1]வினையின் நீங்கி விளங்கிய அறிவன்
விளக்கமாய் உரைத்த முதல்நூல் இலக்கணம்
[2]வழிநூல் வகையும் நால்வகை என்றவா
வழுத்தினோம் உன்னையே மாணடி தொழுதே
உனையே ஆரியன் ஆக்கி அகத்தியன்
உடன்வைத்துக் கதையும் கட்டியே உரைத்தனர்
உயர்புகழ் அதங்கோட் டாசான் பனம்பாரர்
உரைத்திலர் உன்நூலில் சான்றும் ஒன்றிலையே
[3]வினையின் ஆணையால் விளங்கு மங்கையும்
விறல்மிகு மைந்தனும் எதிர்ப்பட நேர்ந்து
விரும்பிப் புணர்ந்ததைக் களவென்று உரைத்தவா
விருப்பொடு சப்பாணி கொட்டி யருளே
எனையும் உன்புகழ் எடுத்துமிக இயம்ப
எல்லாம் வல்லக் கயிலைக் குருமணி
ஆணையால் அறையலுற்றேன் பிள்ளைத் தமிழே
அகமகிழச் சப்பாணி கொட்டி யருளே 6

1. நூற்பா - 1594

2. நூற்பா - 1595, 96

3. நூற்பா - 1039



தங்கும் புகழ்பெற எங்கும் விடலைகள்

கொள்கைமு ழக்குடனே

கூடித் திரியவும் பாடிப் பணியவும்

கோபுரம் ஆக்கினையே

சிங்கத் தமிழர்கள் சங்கத் தமிழினைச்

சிந்தை யில்தேக்கச்

செந்தமி ழோதிடச் சிந்துகள் பாடிடச்

செய்தனை இலக்கணமே

இங்கெம் மழலையர் எல்லாம் கற்றிட

ஏற்றதோர் காப்பியத்தை

எழிலுடன் கொடுத்தனை இனிய களவினில்

எம்மையும் வாழவைத்தாய்

எங்கும் விளைந்திட நால்வகை நிலமும்

கொட்டுக சப்பாணி

குளிர்தமி ழுக்கொரு கொள்கை வடித்தவா!

கொட்டுக சப்பாணி 7



உன்புகழ் பரவிட திருமடந் தன்னில்
உற்றநல் சங்கமத்தை
ஒன்றாய்க் கூட்டியே நன்றாய் நாங்கள்
ஓதியே அறிகின்றோம்
என்னுடன் தங்கிடும் அறியாமை நீங்கிட
இலக்கணம் ஈந்தவா!
எம்மவர் அறிவுக் குறைபல தீர்த்திடும்
இலக்கணம் ஈந்தவனே
மின்னுடல் பொலியுநற் புன்னகை பூத்தவ
மேதினி யோர்வாழ
மேன்மைகள் பெற்றிடச் சாதனை யுற்றிட
மேட்டிமை தந்தவனே!
என்னறி விலுதித்த எண்ணம் உரைத்தேன்
கொட்டுக சப்பாணி
எங்கள் நாடதில் தங்கிடு மதலையே
கொட்டுக சப்பாணி ௪

குறியிடம் கூறுதல் எனுமொரு துறையைக்
குமரிக் கமைத்தாயே
அறிந்து வருதற்கு அரணாய் அமையவே
அவர்கண் வைத்தாயே
நெறிபல வகுத்து அறிந்திட வைத்தாய்
நெஞ்சொடு கிளத்தலையே
செறிந்த புலமை விரிந்த உலகினில்
அறிந்த முறையுடனே
வேறிடம் அறியாள் என்பதை உணர்த்திய
வாக்கினை உரைத்தவனே
வேற்றவர் கூறிடும் அலரினைப் போக்கவே
வைத்தாய் கற்பினையே
அறிவியல் ஓங்கிய காலத்தும் உன்றன்
அறிவுரை பொருந்திடுமே
அறிவாய் முக்காலம் உன்வாக் கோங்கவே
கொட்டுக சப்பாணி ௯

[1]ஓதல் பகையே தூதிவை பிரிவாய்
வகுத்த நெறியானே
படைமேற் செல்லலும் தூதாய்ப் போதலும்
பாங்காய் உரைத்தவனே
காதல் வாழ்வைப் பெரிதாய் எண்ணும்
காரியம் அன்றில்லை
காவல் செய்தே நாட்டினைக் காத்தார்
கண்ணின் இமையாக
தூதறி வினையிலே தூய்மைப் பட்டார்
தகுதியின் திறத்தாலே
ஓதியறிந் தாலும் அடக்கம் கொண்டார்
தலைமைப் பண்பாலே
சூதறி யாதே வாழ்ந்த மறவர்
உளநலம் ஓதியவா!
மாதரின் அன்பால் மதிநலம் பெற்றோம்
கொட்டுக சப்பாணி. 10

1. நூற்பா - 971



## 5. முத்தப்பருவம்

செப்பும் வினாவும் தப்பாது [1]இருத்தலே
இலக்கண முறையாகும்
எப்போதும் மரபினைக் காக்கவே இலக்கணம்
எழுதிய காப்பியனே!
தப்பே எனினும் சான்றோர் [2]ஏற்பின்
வழுவமை தியென்றவனே
தகுதியும் வழக்கும் தழுவியே [3]வருதல்
தகுமுறை என்றவனே!
இப்புவியில் முத்தம் விளைந்திட இடம்பல
இருப்பதை நாமறிவோம்
இவையெலாம் உன்றன் எழிற்கனிவாய் ஈந்திடும்
முத்தம் ஆயிடுமோ
முப்பத்து மூன்று ஒலியே [4]உளதென
முதலில் சொன்னவனே!
மூங்கில் முத்தும் சிதறுவதால் சிந்தா
முத்தம் தந்தருளே. 1

---

1. நூற்பா - 496
2. நூற்பா - 498
3. நூற்பா - 500
4. நூற்பா - 1

வயலின் புடைசூழ் செழுங்கரும்பின் வளரும்
கணுக்கள் தருமுத்தம்
வரப்பால் சூழ்வயல் வளர்ந்த செந்நெல்
வழங்கிடு நெல்முத்தம்
வியனுலகு விரிநீர் வழங்கிடும் முத்தம்
விண்ணிலே விளைமுத்தம்
விலங்காம் களிற்றின் தந்த முத்தம்
வீங்கு கமுகுமுத்தம்
முயன்று மூச்சடக்கி முக்குளித்து அள்ளிவந்த
சிப்பி தருமுத்தம்
மூங்கில் தருமுத்தும் முகத்தினில் நீதரும்
முத்தத்திற் கீடாகா
அயலவர் ஆயிரம் விலையாய்த் தரினும்
அவையும் வீணாகும்
ஆகவே அடியோம் உளமகிழ எமக்கு
முத்தம் தந்தருளே. 2.



பூங்குயில் மரத்தினில் குரலெழுப்பப்
புதரில் நாகணப் புள்ளொலிக்க
எங்கும் கிளிகள் கீச்சென்று
இனிய குரலில் கொஞ்சிடவே
தேங்கும் நீர்நிறை குளமெல்லாம்
தாரா நாரைக் கூட்டங்கள்
தகுமீன் தேடி உண்டிடவே
தருக்கள் தாழ்ந்து நிழல்பரப்ப
யாங்கும் பலவகைப் பறவைகள்
ஆர வாரம் செய்திடவே
ஆங்கே ஆயலோட்டும் பெண்ணொடு
அருமைத் தலைவன் கூடியதை
ஓங்கும் அகமாய் எடுத்து உரைத்த
ஒல்காப் பெரும்புகழ்க் காப்பியனே!
உவகையில் முத்தம் தந்திடுக
உரவோய் முத்தம் தந்தருளே 3



கற்றுத் தேர்ந்த அறிவுடையோர்
கலைகள் ஆய்ந்த நுண்புலத்தோர்
தெற்றத் தெளிந்து உரையாடும்
திருவிற் பாண்டியன் அவையத்து
முற்றும் உணர்ந்த முனைவனாம்
அதங்கோட் டாசான் முன்னாலே
முப்பொருள் உரைத்த மூலவனே!
முத்தம் தந்து அருளாயோ
பற்றறு துறவியின் இலக்கணத்தைத்
தாபத நிலையாம் என்றவனே!
பசலை பரவிய தலைவிக்குப்
பாங்கி கூறும் பயில்மொழியும்
உற்றுழி உதவும் கல்வியைப்போல்
உறுபொருள் உரைத்த உத்தமனே
உவகையில் திளைத்த நாங்களுமே
ஒருதனி முத்தம் தந்தருளே. 4



கயல்கொக்(கு) உடும்பின் தலைகளும்
கரிக்கோடு பன்றியின் பல்லும்
கரும்பும் மூங்கிலும் கமுகினமும்
கதிர்நெல் வாழை கமலமலர்
புயல்தரு முகிலும் தருமுத்தம்
புனலிற் கனலிற் போட்டவுடன்
போகுமே அவையின் ஒளியெல்லாம்
பொருந்தும் விலையுண் டவைவேண்டேன்
இயற்றமிழ் இலக்கணம் இருப்பதேழ்
இயலில் இயம்பிய காப்பியனே!
எவரும் எண்ண முடியாத
இனிய தேனின் சுவைபோல
நயமுடன் இருக்கும் நின்னிதழால்
நல்ல முத்தம் தருகவே
நாற்றிசை உள்ளார் போற்றிடவே
நற்கனிவாய் முத்தம் தந்தருளே. 5



மாலைப் போதினில் முல்லையும் மலர
மாடும் இளங்கன்று தேடிவர
மங்கையும் மலர்ந்த மான்விழி யாலே
மதிற்புறம் நோட்டம் விட்டாளே
காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலர்ந்த காதலையே
கடக்க முடியாது இருத்த லைத்தான்
கார்சூழ் முல்லை உரிப்பொருள் என்றவனே!
சாலையில் சதங்கையொலிச் சக்கரம் உருளுமொலி
சந்தித் திருப்பத்தில் கேட்டிலையே
சங்கடம் வந்ததென இரங்கும் எற்பாட்டை
நெய்தலுக்(கு) ஆக்கி உரைத்தவனே!
பாலைத் திணைக்கு நண்பகலைக் கூறியவா
பலகாலும் முத்தம் தாராயோ
பைந்தமிழர் வாழ்வதனைப் பாங்காய்ப் பகன்றவா
பனித்த முத்தம் தந்தருளே 6

அருளொடு வாராப் பொருளது ஆக்கம்

ஆகா தென்றவனே

அறம்பொருள் இன்பம் ஆகிய முப்பொருள்

யார்க்கும் பொதுவென்றாய்

தருதுறை பலவும் தந்து விளக்கினை

திணைதொறும் இலக்கணமே

தபுஎனும் சொல்லை இருவினை ஆக்கினை

செப்பும் விதத்தாலே

கருப்பஞ் சாற்றில் கனிச்சுவை கலந்து

கற்கண்டு இட்டதுபோல்

களவின் மூலம் நிகழும் கற்பே


கன்னியர் வாழ்வென்றாய்

முருகுகமழ் தமிழ்மொழி முழங்குநின் கனிவாயின்

முத்தம் தருவாயே

மூவாத் தமிழின் மூத்த புதல்வா

முத்தம் தந்தருளே 7



வடமலை இமயமும் வயங்குநீர் குமரியும்
எல்லையாம் தென்நாட்டில்
வழங்கிய மொழியாம் வண்டமிழில் வல்ல
வழக்கினை ஆராய்ந்தாய்
குடக்கும் குணக்கும் குரைகடல் வரம்பாய்க்
கூறும் செந்தமிழில்
[1]குற்றம் பத்தும் நீக்கியே பத்தாம்
குணத்தொடு நூல்செய்தாய்
வடக்கில் இருந்து வந்த அகத்தியன்
வழங்கிய திலக்கணமாம்
வாதமெல்லாம் பொய்யென மரபைக் காத்தவனே
வாய்முத்தம் தந்தருளே
அடம்பிடித்தே ஆங்கிலத்தை அன்றாடம் கற்கின்ற
ஆசைத்தீ அணைந்திடவே
ஆளுமை நாங்களும் பெற்றிடவே ஆசை
முத்தம் தந்தருளே 8

---

*1. நூற்பா - 1598*

மயங்கா மரபின் எழுத்து முறைகாட்டி
மல்குநீர் வரப்பினில்
முப்பொருள் இலக்கணம் செப்பி உரைத்து
முதற்பொருள் காட்டியவா
கயம்சூழ் மருதமும் காடும் மலையும்
கடலென நான்காக்கிக்
காடும் மலையும் திரிந்த பாலையுடன்
ஐந்திணை என்றவனே
அயல்மொழி ஆடுகள் மேயா வண்ணம்
அருந்தமிழ் காத்தவனே
அகத்திணை ஏழும் புறத்திணை ஏழும்
அழகாய் உரைத்தவனே
நயம்பெரு உத்திகள் முப்பத் திரண்டை
நிரல்படக் கொடுத்தவனே
நாங்கள் மகிழ நற்கனி வாயால்
நல்முத்தம் தந்தருளே ௯

உரிப்பொருள் ஐந்தின் உண்மை உரைத்து
ஒழுக்கம் இவையென்றாய்
ஊடலும் கூடலும் இருத்தலும் இரங்கலும்
பிரிவால் வருமென்றாய்ப்
பெரியோர் வாழும் வாழ்க்கை முறைக்கும்
கற்பியல் கடைசியிலே
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனென்று
சிந்திக்க வைத்தவனே!
கருப்பொருள் தன்னில் கடவுளை வைத்த
காரணம் அறியோமே
கன்னியர் தினைப்புனம் காக்கச் சென்ற
காரணம் அறியோமே
அரில்தப நாடி ஐந்திரம் ஆய்ந்து
அருந்தமிழ் இலக்கணத்தை
அனைவரும் அறியச் சொல்லிய வாயால்
அணிமுத்தம் தந்தருளே. 10



## ௬. வாரானைப் பருவம்

சாந்தையர் திருமடத்தைச் சார்ந்தே இருக்கும்
சாற்றுதிரு நின்பெயரால் இயங்கும் சங்கமம்
சத்திக்கும் புத்திக்கும் ஏற்றாற் போலே
சாற்றிட நினைக்குதே உன்திரு நாமத்தைப்
போந்தெம் உயிர்க்குயிராம் செந்தமிழ்க் காப்பியனே
போற்றி ஒழுகுவோம் உன்றன் கட்டளையை
பொன்னாகப் புதைத்தோம் புத்தியில் நாங்கள்
புத்துரை தந்தே வளர்ப்போம் உன்னையே
மாந்தரொடு மரம்புல் மாக்களுக்(கு) இன்பம்
மட்டிலா அளவினில் மடைதான் திறக்கும்
மாநில உயிர்களின் தோற்றம் தனக்கு
மாசிலா இயற்கையே தந்தது என்றாயே
ஈந்தாய் முழுநூலை நாங்கள் இன்றும்
எல்லோரும் வாழ்வதும் அதன்வழி தானே
எழிலார் கைநீட்டி எங்களை நோக்கி
எடுத்தவடி நோகாது வருக வருகவே 1

முப்பாலின் முன்னோடி முந்தையர் வாழ்வதனை
மூன்று அதிகாரம் வகுத்தாய் மூத்தோனே!
முவ்வொன்பான் இயலாக முழுமைசெய்து எங்களுக்கு
முத்தமிழில் முதற்றமிழை உணர்த்திய முதல்வோனே
செப்பினும் வினாவிலும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே
செப்பே வழீஇயினும் வரைநிலை இன்றே
அப்பொருள் புணர்ந்த கிளவியான என்றவா
இப்பாரில் பாமரரின் வழக்கும் நாடி
இயம்பியது இலக்கணம் நீயே மட்டும்
எழுத்தும் சொல்லுமே எல்லோரும் கூறிட
எங்கள் வாழ்வின் பொருளும் உரைத்தவா
தப்பாமல் உமதாணை தலைமேற் கொண்டு
தளரா துழைப்போம் உன்தாள் பற்றியே
தளிர்நிகர் தாளினை எடுத்து வைத்து
தளர்நடை இட்டு வருக வருகவே 2



[1]நிலம்பொழுது இரண்டும் முதற்பொருள் ஆக்கினை
நானிலம் தனக்கு நற்றெய்வம் நான்கும்
நலமொடு உரைத்தாய் நற்றமிழ் மூன்றினில்
முதற்றமிழ் இலக்கணம் முழுதும் சொன்னவா
கலக்கமுறு தலைவையின் களவினை அறிந்து
கற்புநெறி நிற்கக் காட்டிய தோழி
கலக்கமுறு தலைவனின் கவலையைப் போக்கிக்
கன்னியைக் கைப்பற்ற உதவிய பாங்கன்
அலமரல் அறிந்து அல்லலுறு செவிலி
அறத்தொடு நின்றதால் அறியும் நற்றாயே
அண்ணன் தந்தையர் அறத்தொடு நின்றதை
அனைத்தும் இலக்கணம் ஆக்கிய காப்பியா
குலமுறு பாணரும் கூத்தரும் விறலியும்
குன்றிடைக் காட்சியைக் கண்டவர் இலக்கணம்
குறைவிலா(து) உரைத்த தொல்காப் பியனே
குறுநடை இட்டு வருக வருகவே 3

---

1. நூற்பா - 950



போரினில் அறநெறி போற்றிய வெட்சியர்
புறஞ்சேரி இருந்த பசுவினைக் கவர்ந்ததும்
பொறாத கரந்தையர் நடுகல் ஆனதும்
புறத்திணையில் வைத்துப் புகன்ற காப்பியா
சீர்சால் வேந்தன் சிறப்பினைச் செப்பலும்
சிறந்த வெறியாட்டு அயர்ந்த காந்தளும்
சிறுபிள்ளை நிலையும் வாடா வள்ளி
சிறந்த வயவர் கழல்நிலை உரைத்தவா
சீரிய வாளால் சிதைந்த வீரனின்
பீடும் பெருமையும் பெரிய கல்லில்
சிற்பி கொண்டு செதுக்கியே தொழுத
சிறப்புறு விழாவைச் செப்பிய காப்பியா
ஆரும் வேம்பும் போந்தையும் அணிந்து
ஆர்த்தெழு மறவர் ஆண்மையைக் கூறினை
அங்கமெலாம் சிலிர்த்து நாங்களும் மகிழ
அணிநடை இட்டு வருக வருகவே. 4



அகத்திணை ஏழொடு புறத்திணை ஏழும்

அன்பின் ஐந்திணை கைக்கிளை பெருந்திணை

ஆகவர் வெட்சியும் மண்கவர் வஞ்சியும்

அகமதில் போராம் உழிஞையும் உரைத்தவா

முகத்திற்கு நேராய் முரண்பட நின்று

மூண்டெழு சினத்தால் போரிடு தும்பையும்

முத்தான வெற்றி பெற்ற வாகையும்

முடிவில் காஞ்சியால் நிலையாமை சொன்னவா

சிகரம் தொட்ட மன்னன் சீர்த்தியும்

செல்வமொடு புகழினைச் சொல்லும் பாடாண்

செப்பிய செல்வக் குழந்தையாம் காப்பியா

சீரடி வைத்து வருக வருகவே.

சுகம்பெற்று வாழ்ந்த சங்கத் தமிழர்

சொன்னதை மறந்த இன்றைய தமிழன்

சோம்பலைப் போக்க வழியைச் சொன்னவா

சீரடி சிறக்க வருக வருகவே 5

பாட்டும் தொகையும் பதினெண் கீழ்க்கணக்கும்
பரந்து விரிந்த ஐம்பெரும் காப்பியம்
பாடிய மந்திரம் பன்னிரு திருமுறைக்கும்
பாதை காட்டியது தொல்காப் பியமே
கூட்டமும் ஊடலும் இருத்தலும் இரங்கலும்
கூடியோர்ப் பிரிதலும் உரிப்பொருள் என்றவா!
குறிஞ்சியும் முல்லையும் மருதமும் நெய்தலும்
கூறுகெடு பாலையும் ஐந்நிலம் என்றவா !
மூட்டமிகு பனியும் கூதிரொடு காரும்
மூண்டெழு வேனிலும் பெரும்பொழுது என்றவா
முன்காலை விடியலொடு நண்பகலும் முல்லைவிரி
மாலையும் யாமமும் சிறுபொழுது என்றவனே!
காட்டினாய்ச் சேந்தனும் வேந்தனும் வருணனும்
காடுறை மாயோனும் காளியாம் கொற்றவையும்
காவல் தெய்வமாய்க் காட்டிய காப்பியனே!
காலால் நடந்து வருக வருகவே 6



நூலினை எழுதும் நுனித்த புலவருக்கு

நுட்பம் பலவுரைத்த நுண்ணிய அறிவோயே

நுவலும் ஈரைங் குற்றம் நீக்கி

நுதலிய நாலெட்டு உத்தியைச் சொன்னவா

ஆலின் சிறுவிதை அணிதேர் புரவி

ஆனை ஆட்படை தங்கிடும் மரமாகும்

அதிகாலை பனித்துளி பனையைக் காட்டும்

அருமை போலவே ஆனது சூத்திரம்

நாலின் தொகையாய் ஆனது வழிநூல்

நமக்குப் புரிவது நல்லுரை காண்டிகையே

நலம்தரும் இயைபவை எல்லாம் நாடியே

நல்லுரை விருத்தி ஆகும் என்றவா

காலிலும் கலத்திலும் கானையும் கடலையும்

கடந்த தமிழர் பெருமையை உரைத்தவா

கன்னித் தமிழர் வாழ்வு சிறக்கக்

காப்பாய் உள்ளவா வருக வருகவே 7



கன்னியும் காளையும் காதல் வயப்பட்ட
களவும் வெளிப்படக் கற்பில் நின்றும்
கடிமணம் செய்து காளைக்குக் கன்னியைக்
காப்போர் தருகிற கற்பினில் நின்றும்
தன்னில் இருந்து விருந்து எதிர்கொண்டு
தற்காத்துத் தற்கொண்டான் பேணும் தலைவியும்
தன்சொல் மீறா தனயரைப் பெற்றும்
தமருடன் கூடியே வாழும் தலைவனும்
நன்மைசெய் செல்வமும் நலமிகு கல்வியும்
நாளும் தேடிடப் பிரியும் வாழ்க்கையும்
நாட்டினைக் காக்க படைமேற் செல்லலும்
நலமிகு தூதனாய்ப் பிரிதலும் உண்டெனச்
சொன்னாய் இலக்கணம் தொல்காப் பியனே
சொத்தாய்க் கொண்டோம் உன்நூல் அதனை
சித்தம் குளிர செல்வக் குழந்தையே
சீரடி வைத்து வருக வருகவே ௪



பூவே பூவிற் பரிமள மே,யப்
பூதரு தேனே பூங்கரும்பின் சாறே
பொங்கு கடலே பொங்கி வருகையில்
புணையில் ஏறி தப்பித்த ஏடே
காவே காவிற் கொஞ்சும் கிளியே
கபாட புரந்தனில் தவழ்ந்த குழவியே
கண்ணே கண்ணுறு பாவையைக் காக்கும்
கண்ணிமையே கனியே கனிச்சுவையே
ஆவே தரும்பாலால் அட்டசுவைக் கட்டியே
அறிஞர் சிந்தையில் நின்ற ஆகமமே
ஆனந்த வெள்ளமே அன்பின் கொழுந்தே
ஐந்திரம் நிறைந்த ஐயனே வருகவே
மூவாத் தமிழன்னை முகமலர வந்தவா
மூலனும் வள்ளுவனும் கொண்டாடும் தேவே
மரபினைக் காக்கவே நூல்தனைத் தந்தவா
மகிழ்ந்தே அழைத்தோம் வருக வருகவே ௯



எழுத்தெனப் படுவது  உந்தியில் தோன்றி
எழுந்து வருவளி தலையிலும் நெஞ்சிலும்
கழுத்திலும் நின்று மூக்கும் நாக்கும்
பல்லொடு இதழ்செய் பணியால் வந்ததே
எழுத்துகள் சேர்ந்து இயைந்து நிற்பது
எல்லாம் சொல்லாம் பொருள்பட நின்றால்
எழுத்தொலி அளக்க  இமையும் நொடியும்
இருப்பதை உணர்த்திய இலக்கணப் புலவா
எழுமிசை தந்திடும் பறையும் யாழும்
பண்ணொடு தந்தவா திணைக்கருப் பொருளாய்த்
தொழுதிடும் தெய்வம் மக்களும்  மாமரம்
புள்ளும் உணவும் நீரொடு பூவும்
விழுமிய தொழிலும் விளங்கு திணைக்கென
வரிசைப் படுத்தி வகையாய் உரைத்தவா
வழுத்தி வணங்கினோம் வருக வருகவே
விரும்பி அழைக்கிறேம் வருக வருகவே! 10

83,7,964 நூற்பாக்களைக் கொண்டு எழுதப்பட்டது இப்பாடல்.



## 7.அம்புலிப்பருவம்

### ஒப்பெனக்கூறல்

களவினைச் செய்வார் கருத்தில் நின்றவனே
காய்ந்தனர் பிரிந்தவர் உவந்தனர் கூடினர்
கடும்பகல் தன்னில் காணாமல் போனாயே
காப்பியன் கடுப்ப[2] நீயும் ஆகினையே
களவினை நிகழ்த்திக் கற்பினில் நின்றிடும்
காதலர் இருவர்க்குக் களிப்பினைத் தந்தவா
கடும்பாலை தன்னில் உடன்போக்கு நிகழ்த்திய
காதலர் இலக்கணம் கூறிய காப்பியா!
உளத்தில் நிறுத்தினை இருப்பத் தேழ்வரை[1]
ஒன்பது பேரினில் ஒன்றாய் நின்றவனே!
உரைத்தான் இருப்பத் தேழியல் நூலினில்
ஒன்பதாய் பகுத்தான் ஒவ்வொரு இயலையுமே
கிளவி ஆக்கம் செப்பிய காப்பியக்
குழவியும் நீயும் நிகரெனச் சொன்னோம்
கீழ்மை அகல குழந்தை யுடனாட
கிழக்கில் உதித்து அம்புலி ஆடவாவே 1

---

இருபத்தேழ்வர் 27 உடுக்கள் ஒன்பதுபேர்-- ஒன்பது கோள்களில் (நவகிரகங்கள்) ஒன்று திங்கள் தொல்காப்பியமும் 27 இயல்களைக் கொண்டுள்ளது. அதிகாரத்திற்கு 9 இயல்கள் கொண்டு விளங்குகிறது.

2 - போல (உவம உருபு)

## வேறுபடுத்தி உரைத்தல

பொங்கு கடலில் போய்மறைவாய் நீயே
பொங்கு கடலலைக்குத் தப்பித்தவன் இவனே
பரிதியின் ஒளியால் மங்குவாய் நீயே
பரிதியாய்த் தமிழுக்கு விளங்குபவன் இவனே
கங்குலில் மட்டும் உலவுவாய் நீயே
கங்குல் பகலறக் கலக்குபவன் இவனே
கலக்கமதை காருவாவில் செய்பவன் நீயே
கலங்கிய சித்தத்தைத் தெளிவிப்பவன் இவனே
தங்கு பரிதியால் ஒளிர்பவன் நீயே
தானாய் ஒளியுடன் இருப்பவன் இவனே
தடையாய்க் கார்மேகம் மறைக்குமே உன்னைத்
தடைக்கு விடை கூறித்தப்பித் தானிவனே
திங்களெனப் பெயரிருந்தும் தினம்வரு வதில்லையே
தினந்தினம் விளக்கப் பெறுபவன் இவனே
திங்களே காப்பிய னோடு ஒப்பாகாய்த்
தீதறு குழந்தையொடு அம்புலி ஆடவாவே 2

---

சந்திரன் மறைவது கடலில் தொல்காப்பியம் ஆழிப் பேரலையின் போது மறையாதது ஞாயிறு தோன்றினால் திங்கள் ஒளிமங்கி விடும் ஆனால் தொல்காப்பியம் ஞாயிற்றைப் போல் ஒளி வீசுகிறது. இரவில் மட்டும் உலா வருவது நிலா. இரவு பகல் பாராது என்னேரமும் படிப்போர் உள்ளத்தில் உலா வருபவன் தொல்காப்பியன், நிலா இல்லாத அமாவாசையின் போது பைத்தியம் அதிகம் பிடிக்கும். ஆனால் தொல்காப்பியம் படித்தால் சிந்தனையில் தெளிவான அறிவு வளரும். ஞாயிற்றின் இடமிருந்து ஒளிபெற்றே திங்கள் ஒளி விடுகிறது. தொல்காப்பியர் தானே புகழுடன் விளங்குகிறார் கரு மேகங்கள் திங்கள் ஒளியைத் தடைசெய்யும். ஆனால் தொல்காப்பியர் அதங்கோட்டாசான் தடைக்கெல்லாம் விளக்கம் கூறி வென்று வந்தவர். திங்கள் (மாதம்) என்ற பெயர் இருந்தாலும் மாதம் முழுவதும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஆனால் நாளும் நாளும் புதுப்புது விளக்கமுடன் பொலிவு பெறுகிறார். ஆகவே தொல்காப்பியரும் நிலாவும் வேறுபாடுகளை உடையன.

## தானம் கிடைக்கும் (கொடை)

குற்றம் பத்தில்லா நூலினை யாத்தவன்
கறைதனைப் போக்குவான் ஓடி வாநீ
குறைந்தும் நிறைந்தும் நிலையிலா திருப்பவனே
நிறைமதி ஆக்குவான் ஐந்திரம் நிறைந்தவன்
எற்றைக்கும் நிலையாமை அறியாத உனக்கு
எப்படியும் காஞ்சியால் உணர்த்துவான் ஓடிவாவே
எல்லோனை இரந்தே இரவில் வாழ்கிறாய்
எங்கள் காப்பியன் எப்போதும் வாழ்விப்பானே
அற்றைத் திங்கள் பரம்பில் இருந்தநீ
இற்றைத் திங்கள் இல்லாமல் மறைந்து
அங்கவை சங்கவையை அழவைத் தாய்நீ
அக்குறை போக்குவான் அரில்தப நாடியோன்
சுற்றிய தாரகை சூழ்ச்சியில் தப்பிக்க
முகிலில் மறைந்து ஒளியாமல் இருக்க
புறத்தால் மறத்தினை ஊட்டுவான் உனக்குப்
பயமது நீங்க அம்புலி ஆடவாவே 3

---

தன் நூலினைப் பத்துக் குற்றம் இல்லாது செய்தவன். ஆகவே நிலாவினிடத்தில் உள்ள கறையாகிய குற்றத்தைப் போக்கும் இயல்பு உடையவன். நிலா குறைந்தும் வளர்ந்தும் நிலை இல்லாது இருப்பவன். தொல்காப்பியம் ஐந்திரம் நிறைந்த நிறைமதியாளன் தொல்காப்பியன் எனவே அவன் நிலாவினை நிறைமதியாக்குவான். நிலையாமை உடையது நிலா. நிலையாமையை உணர்த்தும் காஞ்சித் திணையை அறிந்ததால் நிலாவின் நிலையாமையைப் போக்குவான். அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலா என்று பாடிய அங்கவை சங்கவை என்னும் பாரிமகளிரை அழவைத்தது நிலா. ஆனால் தொல்காப்பியர் அக்குறையைப் போக்குவான் சுற்றிலும் உள்ள உடுக்கள் நெருக்காமல் தப்பிக்கப் பயந்து மேகத்தினுள் மறையாமல் இருக்க வீரத்தை ஊட்டுவான் தொல்காப்பியன்.

முனிவர் சினத்தின் சாபம்[2] போக்கவே
முனைவர் காப்பியன் வழிமுறை காட்டிடுவான்
முயலும் கிழவியும் உன்னிடம் நீங்கிட
முத்தமிழ்க் காப்பியன் முயற்சி செய்திடுவான்
இனிமேல் கறையும் குறையும் நீங்கிட
இலக்கணக் கடலில் குளித்தே எழுந்திடுவாய்
இப்படி வளர்வதும் தேய்வதும் என்னும்
இழிநிலை உனக்கிலை இதையும் அறிந்திடுவாய்
தனியாய் வானில் வரவேண் டியதில்லை
தலைவன் தலைவியை அனுப்பி வைப்பான்
தமிழ்போல் தழைத்திடத் தண்ணிலவே தயங்காது
தனிப்பெரும் குழவியுடன் அம்புலி ஆடவாவே
பனிவிழும் இரவினில் பாரினில் உலவிட
பாங்கன் பாங்கியும் துணையாய் வரவே
பைந்தமிழ்ப் பாவலன் பார்த்துக் கொள்வான்
பால்நிலவே நீயும் அம்புலி ஆடவாவே 4

தக்கன் தனது 27 பெண்களையும், சந்திரனுக்கு மணம் செய்து கொடுத்தான். ஆனால் சந்திரன் ரோகிணியிடம் மட்டும் அன்பு கொண்டிருந்தான். இதனால் மற்ற மனைவியர் தந்தையிடம் முறையிட்டனர். இதையடுத்து எல்லோரிடத்திலும் அன்பு செலுத்தவில்லை எனில் எனது சாபத்துக்கு ஆளாவாய் எனச் சந்திரனைத் தக்கன் எச்சரித்தான். ஆனாலும் சந்திரன் எப்போதும் போல ரோகிணியிடம் மட்டுமே அன்போடு பழகி வந்தான். இதனால் சந்திரன் தேய்ந்து போகும்படித் தக்கன் சாபமிட்டான்

## தண்டனை கிட்டும் (ஒறுப்பு)

இறைவன் முடியில் இருக்கும் உனக்கு
இறுமாப்பு இருப்பதால் எங்கள் மதலையுடன்
இன்பத்துடன் விளையாட வாரா திருந்தால்
அருகில் உள்ள கங்கையில் ஆழ்த்திடுவான்
மறைந்தே வாழும் கள்வர் மனதுபோல்
கறைதனை உள்ளே மறைத்து வாழ்கிறாய்
மகிழ்வுடன் விளையாட வாரா திருந்தால்
மிரட்டுவான் நான்மறை முற்றிய நாவோனே!
நறைமிகு இலக்கணம் நல்கிய காப்பியன்
அதிகாரம் படைத்தவன் அறிவாய் நீ நிலவே
நீள்கடல் அலைக்குத் தப்பிய வல்லோன்
நினைவில் இருத்தி அம்புலீ ஆடவாவே
துறைபல அறிந்தவன் திணையால் சிறந்தவன்
தெய்வம் ஐந்தையும் தெரிவித்தவன் இவன்தானே
திங்களே நீயும்தொல் காப்பியக் குழவிதரு
தண்டனையில் தப்பிக்க அம்புலீ ஆடவாவே 5




சாம பேத தான தண்டம் நாலும்

இருவேறு வாழ்க்கை உடையவன் நீயே
இருகூறாய் வாழ்க்கை உரைத்தவன் இவனே
இருப்பத் தெழுவரை சுற்றமாய்க் கொண்டவன்நீ
இருப்பத் தேழுஇயல் தந்தவன் இவனே
ஒருநாளும் நிலையாய் இருப்பவன் அல்லநீ
உலகினில் நிலைத்து வாழ்பவன் இவனே
ஒருநாள் பாம்பும் உனையே விழுங்கிடும்
விழுங்க வந்த ஆழிக்கும் தப்பித்தவனே
மருவினை நீக்கி மகிழ்விப்பான் மதியே
மழலைக் குழந்தையுடன் ஆடவந்தால் நீயே
முனிவர் தந்தசாபம் நீக்குவான் முழுநிலவே
மகிழ்ந்து குழந்தையுடன் ஆடவந்தால் நீயே
ஒருபோதும் விளையாட வாரா திருந்தால்
உன்னைப் பாம்பால் விழுங்க வைப்பான்
ஒழுங்காய் ஓடிவந்து ஒல்காப் பெரும்புகழ்த்
தொல்காப்பி யனுடன் அம்புலி ஆடவாவே! 6




கல்வியிற் சிறந்தோன் கசடற அறிந்தோன்
கனல்நீர் வளிபுவி ககனமொடு ஐந்தும்[1]
கலந்த மயக்கம் உலகம் என்றானே
காலம் மூன்றெனெ வகுத்துக் கொடுத்தானே
கல்லாய் நிற்கும் காளையின் புகழைக்
காசினியில் உள்ளோர் போற்றி உரைத்திடவே
கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்
கடந்தது உயிரே நின்றது யாக்கையே
புல்லின் உறுப்பை அழைக்கும் முறையொடு[2]
புறக்காழ் உடையது அவைதான் என்றானே
புறத்திணை ஏழாய் அகத்திணை ஏழாய்ப்
புகன்ற குழந்தை புனிதன் இவனோடு
நில்லாமல் வந்தே விளையா டிடுவாய்
நீல வானத்து நிலவே நீயும்
நிறைமதி ஆகிட நீயும் நினைத்து
நிமலனுடன் அம்புலி ஆட வாவே 7



1 - நூற்பா 1589

2 - நூற்பா 1585

பால்நிலா என்ற பெயர்தனைத் தந்து
பாட்டில் புலவர்கள் புனைந்தே உரைத்தார்கள்.
பாவையர் கூடி பலகாரம் வைத்துப்
பாடி ஆடி உன்னைப் போற்றிடுவார்
ஆலகால நஞ்சைக் கண்டம் வைத்தான்
அருந்தலை அமர்ந்த ஆணவம் இருந்தால்
அடியோடு களைந்து அமுதைப் பொழிந்திடுவாய்
அருமைக் குழந்தையுடன் அம்புலி ஆடவாவே
நால்வகைத் தெய்வம் நமக்கே உரைத்தான்
நற்றமிழ் காப்பியனே நாளும் நிலவே
நலியா வண்ணம் இருக்க வேண்டுமெனில்
நம்பியை நாடி அம்புலி ஆடவாவே
மேலே செல்லும் வழித்தடம் விட்டு
மேதினி மீதினில் வந்தே இறங்கிடுவாய்
மேவிய சிறப்புடை மென்னடைக் குழவியுடன்
மேன்மைகொள் நிலவே அம்புலி ஆடவாவே 8



காலநேரம் உன்னை வைத்தே கணியன்
கட்டம் இட்டு கணிப்பான் சாதகத்தைச்
சந்திரா சுட்டம் சங்காரந் தியென்றும்
சாந்தி கழிக்க வைத்தவனே வாராயோ
பாலச் சந்திரா பாவம் புண்ணியம்
பாராது பவனி வருபவனே பகிசுகாரம்
பண்ண நினையான் எங்கள் பாலகனே
தோசம் நீங்க நேசமுடன் வாராயோ
நீல வானத்து பூரணச் சந்திரா
நித்தம் நீவர நிச்சயம் போசிப்பான்
நியாயம் அநியாயம் இரண்டும் ஆய்ந்து
நிர்மூலம் ஆக்கிட நிமலன் உதவிடுவான்
ஆலகால விடத்தை அடக்கிய அமலனை
அருச்சனை செய்திட அதிட்டம் அடைந்திடுவாய்
அதங்கோட் டாசான் ஐயம்தவிர்த்த இவனுடன்
அர்த்தச் சந்திரா அம்புலி ஆடவாவே ௯



வினையின் நீங்கிய அறிவன் இவனொடு
விழுமிய நிலவே அம்புலி ஆடவாவே
விரும்பி இருவரும் விளையா டிடுவே
வேண்டினோம் உன்னை அம்புலி ஆடவாவே
முனைவன் ஆன முனிவன் இவனொடு
முழுமை நிலவே அம்புலி ஆடவாவே
முத்தமிழர் வாழ்வை முழுதும் உரைத்த
முதல்வனுடன் நீயும் அம்புலி ஆடவாவே
தினைப்புனம் காத்த தீந்தமிழ்ப் பெண்ணின்
திறத்தை உரைத்த  தெய்வமகன் இவனே
தேய்வதும் வளர்வதும் விட்டு நிலைபெற
தொல்காப் பினுடன் அம்புலி ஆடவாவே
அனைவரும் வாழ ஐந்திரம் அறிந்தே
அருந்தமிழ் காத்த  நுனித்தகு புலவன்
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியனுடன்
ஓடி யாடிட அம்புலி ஆடவாவே 10





## 8 சிற்றிற் பருவம்

மண்ணசை கொண்டே மன்னரும் படைதனை
மட்டிலா மறத்தொடு கூட்டுவர் களத்தினிலே
மழுவொடு வாளையும் ஈட்டியும் ஏந்தியே
மனதார வஞ்சினம் கூறியே செல்வார்கள்
கண்ணென நாட்டினைக் காத்திடும் வீரரைக்
கற்புடை மகளிரும் நெற்றியில் திலகம்
கருத்துடன் இட்டே களத்திற்(கு) அனுப்புவர்
கன்னியர் கூடியே குலவை கூறிடும்
பெண்ணென நாங்களும் பேராற்றுக் கரைதனில்
பெருமையுடன் கட்டிய பருமணல் வீடதைப்
பெருவிரல் காலால் சிதைக்காதே பேதையர்
பேணிய சிறுவீடு தன்னைச் சிதையேலே
புண்ணில் ஊறிடும் செந்நீர் சிந்திடும்
பிளந்த மார்பினில் மருந்திடும் மங்கையர்
மணலில் கட்டிய சிறுவீட்டை மைந்தா
மண்டியிட்டுக் கெஞ்சினோம் சிற்றில் சிதையேலே 1

கொடிநிலை[1] கந்தழி வள்ளி என்றும்
கொற்றவை தன்னைக் குலதெய்வம் என்றும்
குன்றக் குறவர் கூடித் தொழுதிடும்
குமரன் உள்ளிட்ட தெய்வம் யாவையும்
படிமம் அமைத்தே பரவிய பண்டையர்
பழக்க வழக்கத்தைப் பகரந்தாய் நூலதில்
பாண்டியன் அவையினில் கேட்ட கேள்விக்குப்
பழுதறப் பதிலும் பகர்ந்த பாவலனே
துடியொடு துடும்பும் தட்டி முழங்கவே
தீதில் கூத்தரும் பொருநரும் பாணரும்
தீராப் பசியொடு வள்ளலைத் தேடிடும்
தீந்தமிழ் விறலியை ஆற்றுப் படுத்தியே
அடிசுடும் பாலையில் அனுப்பி வைத்தவனே
அதங்கோட் டாசானின் ஐயமதுதவிர்த்தோய்
ஆசையாய் நாங்களும் ஆற்று மணலில்
ஆக்கிய அரும்பெரும் சிற்றில் சிதையேலே 2



நூற்பா - 1034

வினைபயன் மெய்உரு என்ற நான்கையும்[1]
வகைபெற வந்த உவமையாய் வகுத்தவா
வடுவில் வையத்து வாழ்வு சிறக்கவே
வகுத்தாய் இலக்கணம் வளர்புகழ்ச் செல்வனே!
தினைப்புனம் காக்கும் மங்கையர் கூடியே
தித்திக்கும் தேனினைச் சுவைத்தடும் போதினில்
திடுமென வந்து தோன்றும் காளையின்
திறமெலாம் உரைக்கும் தெய்வப் புலவா!
மனையற மாண்பாம் மணங்கொள் வாழ்க்கையும்
மாபெரும் முனிவர் மாசறு தவத்தையும்
மழவர் உழவர் களமர் மாண்பையும்
மாசிலா நூலில் கூறிய முதல்வா
இனைத்துணை என்பதொன் றில்லா இன்பம்
ஈந்திடும் ஈடிலா எங்கள் ஏந்தலே!
இளநகைச் சிறுமியர் இழைத்த சிற்றில்லை
இளகிய மனத்தாய் சிற்றில் சிதையேலே 3



1 - நூற்பா 1222

மாத்திரை[1] எழுத்தே அசைவகை என்றும்
யாத்த சீரேயடி யாப்பு என்றும்
மரபே தூக்கே தொடைவகை என்றும்
மறவாது செய்யுளுக்கு உறுப்பாய் உரைத்தவா!
காத்தாய் மொழியைக் கண்ணிமையாய்க் காப்பியா
கைகோள் வகையும் காலவகையும் கூறியே
காவியம் படைப்போர்க்குக் காட்டினாய் வழியைக்
கனிவாய்த் தொல்காப் பியச்செல்வா வேண்டினோம்
பாத்திக்கு வரப்பு பக்கம் நான்கிலும்
படைத்திடும் உழவர்போல் பாக்கள் நான்கினைப்
படைக்க இலக்கணம் பண்ணித் தந்தவா!
பாவலர் தமக்குப் பாதை போட்டவா!
சாத்தன் சாத்தியை விரவிய திணைக்குச்
சாற்றியே இலக்கணம் செப்பிய செம்மலே
சிறுமியர் கூடியே சிற்றாற்றுக் கரையில்
சேர்ந்து கட்டிய சிற்றில் சிதையேலே 4




1 - நூற்பா - 1259

யாப்பின் இலக்கணம் இரண்டெனச் சொன்னாய்
அவையே செவியுறை அங்கதம் என்றாய்
அருமைப் புகழொடும் பொருளொடும் வருவதும்
வசையொடும் நசையொடும் வருவதும் என்றாய்த்
தாப்பிசை யாற்றுநீர் நிரல்நிறை என்றும்
தனியாய்ச் சொல்லைக் கொண்டு கூட்டவும்
தாவில் மொழியை மாற்றிக் கொள்வதும்
தப்பிலாப் பொருள்கோள் என்றே உரைத்த
காப்பினைத் தன்னையர் செய்திடக் கன்னியும்
காளைக்குச் செய்தியைத் தோழியால் உணர்த்தும்
காதலர் இலக்கணம் காட்டி உரைத்தவா
கன்னித் தமிழரின் காவல் தெய்வமே
பூப்புன லாடியும் பூவிரி சோலையில்
புதுமணல் பரப்பி பூவையர் நாங்கள்
புத்தம் புதிதாய்க் கட்டிய வீட்டைப்
புலவா பொன்னடியால் சிற்றில் சிதையேலே 5

வடகிழக்கு வங்கமும் வடமேற்குச் சிந்துவும்
வளமுடைய தெற்கில் பஃறுளி ஆறும்
இடமும் வலமும் இருபெருங் கடலும்
எல்லையாய் விளங்கிய நாவலந் தீவில்
திடமான மெய்ஞ்ஞானம் சேர்ந்த மேலோர்
திறனைந்து உணர்ந்த திப்பிய மானவர்
தேர்ந்த மொழியார் சொல்லிய வழக்கும்
தீந்தமிழ்ச் செய்யுளும் ஆய்ந்த புலவா
உடலொடு உயிரின் உறவை உணர்த்தவே
உடல்மேல் உயிர்வந்து ஒன்றும் என்றாயே
உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்
உருபினை ஏற்கும் என்ற உத்தமா
இடம்பொருள் ஏவல் எல்லாம் உணரும்
இளம்பெண் நாங்கள் இழைத்த இல்லினை
இல்லாமல் செய்யா திருக்க வேண்டினோம்
இனியவா எங்கள் சிற்றில் சிதையேலே 6



கொங்கு நாட்டினில் குன்றாப் புகழ்மிகும்
கொள்கைப் பற்றாளர் குறையிலாத் தமிழ்மீது
கயிலைக் குருமணி காட்டிய பாதையிலே
கால்வைத்த தொல்காப் பியர்தமிழ்ச் சங்கமமே
எங்கெங்கு முள்ள ஏழையரும் அறிந்திடவே
ஏற்றமுறக் காப்பியத்தை எடுத்தோதி வருகிறதே
எழிலார் அச்சங்கம் இனிதாக வளர்வதற்கு
இன்சுவை அமுதூட்டும் சாந்தையர் திருமடமே
மங்காப் புகழுடை மணிவிழா நாயகராம்
மருதாசல அடிகள் மடிவளரும் மன்றத்தில்
திங்கள் தோறும் ஆய்கின்ற காப்பியத்தைத்
தந்த தொல்காப் பியமா முனியே
மங்கையர் தாம்கூடி மணல்வீடு கட்டினோம்
மனம்வைத்துக் காத்திடுக மன்றாடிக் கெஞ்சுகிறோம்
மலரிட்டு அணிசெய்த மணல்வீடு தன்னை
மலரடி கொண்டுநீ சிற்றில் சிதையேலே. 7



நச்சினார்க் கினியர் நவின்ற கதையை
நாடும் ஊரும் நம்ப வில்லையே
நம்தொல் காப்பியர் யாருடைய மாணாக்கன்
நற்சான்று இதழும் இதுவரை கிடையாது
எச்சவியல் இயலில் ஏடா கூடமாய்
இடைச்செருகல் உள்ளதை யாவரும் அறிவாரே
எப்படியோ காப்பியா உன்புகழ் மறைக்க
எத்தனை செய்தும் ஏனோ தோற்றார்கள்
அச்சமிலாது தமிழர் வாழ்ந்தனர் அன்றைக்கு
ஆங்கில மொழிக்கு அடிமைதானே இன்றைக்கு
அனைவரும் உன்னைப் போற்றிப் படித்தால்
அருமைத் தமிழும் வாழும் அனைத்துலகில்
துச்சமென உயிரை மதித்து உன்னைத்
தூக்கிப் பிடிப்போம் தொல்காப் பியனே!
துழாவி மணலால் வீடு கட்டினோம்
துடியிடை மங்கையர் சிற்றில் சிதையேலே 8



ஒத்தகாட்சி முதலா உத்திவகை எண்நான்கை[1]
ஒன்றாய் உரைத்தாய் உலகில் உவப்புடனே
ஒப்பக் கூறவும் ஒருதலை மொழியவும்
உரிமை உண்டென ஓங்கிச் சொன்னவனே!
கத்தும் கடலின் ஆழிப் பேரலை
கபாட புரத்தைச் சூழந்த போதும்
கண்ணிக்குத் தப்பிய மானாய் மீண்டவனே!
கனிச்சுவைத் தமிழர் மரபைக் காத்தவனே!
உத்தமதா னபுரத்து உ.வே.சா அவராலே
உன்நூல் பெற்று உள்ளம் மகிழ்ந்தோமே
உரைபல வந்தும் உன்நூல் ஆழத்தை
உண்மையில் யாரும் உணர முடியாதே
அத்தம் உனக்கிலை அழிவும் உனக்கிலை
அறிந்தோம் ஐயாவே ஆகவே நாங்கள்
அழகாய்க் கட்டிய ஆற்றுமணல் வீடதை
அண்ணலே அருமைச் சிற்றில் சிதையேலே 9

1 - நூற்பா 1610

அகரம் முதலாய் அனைத்தும் உணர்த்தி
அதிகாரம் செய்தவனே ஆட்சிக் கட்டிலில்
அன்னைத் தமிழை அமர்த்தி மகிழ்ந்தவனே!
அருந்தமிழ்ப் பயிரைக் காக்கும் காவலனே!
அகத்தையும் புறத்தையும் அரிதில் உணர்த்தி
ஆசின்றித் தமிழை அழகாய் வளர்த்தவனே!
அயல்மொழிப் பூச்சியை அழிக்கும் மருந்தாய்
ஆக்குவோம் நுனித்தகு புலவா உன்னூலை
முகமது மலரும் அகமது குளிரும்
முன்னிய வினையும் முற்றிலும் முடியும்
முனைவா உன்னூல் முழுதும் கற்றாலே
முழுமையாய்க் கிடைத்த முதனூல் உனதன்றோ
திகழும் திசையெலாம் நின்புகழ் பாடுவோம்
துகளறு நூலினைத் தொழுவோம் இனிமேலே
தெய்வப் பிறவியே தேவாதி தேவனே!
சிறுமியர் கட்டிய சிற்றில் சிதையேலே. 10



## ௯. சிறுபறைப் பருவம்

தோலினால் ஆகிய தொண்டகப் பறையைத்
தொடர்ந்து முழங்கிடு குறிஞ்சியர் மகிழ்ந்திடவே
தோழியும் தலைவியும் தினைப்புனம் காக்கையில்
திடுமெனத் தோன்றிய தலைவன் மகிழ்ந்திடவே
காலிலும் கலத்திலும் கடந்து காளையர்
கன்னியர் கைபிடிக்கப் கைப்பொருள் தேடிடுவே
காவல் மரமாம் கடம்பினைக் காக்கவே
கட்டிய வாரின் துடியினைக் கொட்டிடுக
பாலினும் இனிய சொல்லினர் மகிழ்ந்திட
பசுத்தோல் கொண்டு செய்திட்ட பறையைப்
பசுந்தாள் பறிக்கையில் நெல்லரி கிணையைப்
பண்ணொடு சேர்த்தியே கொட்டுக சிறுபறையே
கோலினால் தட்டியே மணமுழா தன்னையே
கொட்டுக சிறுபறையைக் கோதையர் மகிழ்ந்திடவே
கொலேறு தழுவுகையில் ஏறுகோட் பறையை
எல்லோரும் மகிழக் கொட்டுக சிறுபறையே 1

புலர்விடியற் காலையில் புனிதஆ யர்சேரி
போற்றும் தயிர்கடை புதுமை மத்தொலியும்
புற்றறை தேடியே சென்றிடும் கோவலர்
புல்லாங் குழலின் இசையொலி முல்லையில்
மலர்தனைத் தேடியே மதுவுணும் வண்டது
முரலும் ஒலியொடு அன்னம்செய் ஒலியும்
முட்டியே பாலினைக் குடித்திடும் கன்றது
முழக்கமும் உழவர் முழவொலி மருதத்தில்
அலர்புன்னை வளர்ந்திடும் அலைதொடும் கரையினில்
அலைந்திடும் கடற்காகம் எழுப்பும் ஒலியும்
அளத்தினில் பரதவர் மீனுகோட் பறைதனை
அடித்து முழக்கிடும் அருஞ்சுறா நெய்தலில்
உலர்ந்த நாவொடு உலவிடும் மானினம்
ஒன்று கூடி ஒலித்திடும் பாலையில்
ஒப்பிலாக் காப்பியா ஒலித்திடு துடியினை
உவக்க நாங்களும் கொட்டுக சிறுபறையே 2




கடல்கடந்த நாடெங்கும் கன்னித்தமிழ் வாழக்
கடும்பயணம் செய்தவர் கண்ணிமையாய்த் தமிழைக்
காப்பாற்றக் கல்லூரி தந்த கயிலைக்
குருமணி கண்டெடுத்த தமிழ்ச்சங் கமத்தை
மடத்தில் அமைத்தே திங்கள் தோறும்
மாணாக்கர் முனைவர் பலரைச் சேர்த்து
மாமுனிஉன்னூலைப் பயிலவே ஊக்கத்தை
மக்களுக்குத் தரும்மரு தாசலக் கோவால்
தடம்பதித்து வளர்க்கும் தொல்காப் பியமே
தந்த தொல்காப்பி யனேநீ தப்பொடு
துடும்பும் துடியும் தொண்டகமும் கொண்டு
தவறாது உளமகிழக் கொட்டுக சிறுபறையே
விடமான வடமொழி வியன்தமிழில் நுழையாமல்
விலக்கியே காத்த தொல்காப் பியனே!
வித்தாக தமிழுக்கு விளங்கும் மாமுனியே
விறலியர் விரும்பிடக் கொட்டுக சிறுபறையே. 3

திருவளர் பேரூர் சாந்தநா யகன்றன்
திருமர போங்கிட வந்த குருமணி
திருவுளத்தால் விளைந்த தொல்காப்பி யத்தமிழ்ச்
சங்கமம் சலிப்பின்றி உழைப்பதை அறிவாயே
அருளாசி வழங்கி தொடங்கி வைத்திடும்
மருதா சலவடிகள் மனத்தினில் சித்தராய்
அன்றாடம் எண்ணி வணங்கிடும் காப்பியனே!
அருளொடு மகிழவே சிறுபறை கொட்டிடுக
கருப்பொருள் உரிப்பொருள் முதற்பொருள் மூன்றையும்
கணக்கிட்டு உரைத்த காப்பியா கேட்கின்றோம்
களத்தினில் போரிடும் வீரரின் காலணி
கழலினைப் பாடினாய் கொட்டுக சிறுபறையே
பொருள்தனை விளக்கவே எழுத்தையும் சொல்லையும்
பொருத்தி உரைத்தவா பண்பாட்டைத் தமிழர்
போற்றி வளர்த்ததைக் காப்பிட்டுக் காத்தவா
போற்றி வேண்டினோம் கொட்டுக சிறுபறையே 4



இல்லினை நீத்துக் கல்லிடைக் குகைதனில்
இருந்தவம் இயற்றும் தாபதர் தவமும்
இறப்பும் நிகழ்வும் எதிர்வு மென்றுரைக்கும்
இன்றமிழ் ஓதிய அறிவர் நெறியும்
வில்லின் விசையால் வெற்றியைப் பெற்றிடும்
விறலுடை வேந்தர் ஐவகைத் தொழிலையும்
வேந்தர் தந்திடும் படையும் கண்ணியும்
வேளாண் மக்கள் விரும்பிடும் விவரமும்
சொல்லினை மட்டும் சொல்லியே பிழைத்திடும்
செந்தண்மை பூண்டோர் நால்வகைப் பொருளாம்
செப்பிடும் நூலும் கரகமும் முக்கோல் மணையும்
செப்பிய காப்பியா சிறுபறை கொட்டிடுக
வில்லும் வேலும் கழலும் கண்ணியும்
விளங்கு தாரொடு மாலையும் வாளும்
வைப்பது குறுநில மன்னர் கடனென
விதித்திட்ட தேவே கொட்டுக சிறுபறையே 5



பறை

புல்லும் மரமும் ஓரறி வுடையன[1]

புறக்கா ழனவே புல்லெனக் கூறினை

புறத்தில் பட்டையும் அகத்தில் சேகையும்

பெற்ற மரத்தின் உறுப்பெலாம் உரைத்தவா!

[2]பிள்ளையும் குட்டியும் குருளையும் பறழொடு

பார்ப்பும் இளமைக்கு உரியதாய் இயம்பியவா

பேடையும் பெடையும் பெட்டையும் பெண்பால்

பெயரென மரபினைப் பேசிய பெருமானே!

நல்லதொறு மந்தியும் மூடும் கடமையும்

நாகும் அளகும் பாட்டியொடு பிடியும்

நற்பெண் பெயரென நாடி உரைத்தவனே!


நாங்களும் நலம்பெறக் கொட்டுக சிறுபறையே

இல்லுறைச் சேவலும் களிறும் சேவும்

இரலையும் ஏறும் ஏற்றையும் எருதும்

இன்ன பிறவும் ஆண்பால் என்றவா

இன்பம் பெற்றிடக் கொட்டுக சிறுபறையே 6



எல்லரி

1 - நூற்பா 1585

2 - நூற்பா 1500,1501,1502

எண்வகை  செய்யுளை அம்மை[1] அழகு

தொன்மை தோலொடு விருந்து இயைபு

எண்ணரும் புலனொடு இழைபெனப் பிரித்தவா

எல்லாரும் மகிழவே கொட்டுக சிறுபறையே

மண்திணி[2] நிலனும் நீரொடு நெருப்பும்

மாவளி விசும்பும் மயங்கிய உலகம்

மரபுநிலை[3] திரியின்  பிறிது பிறிதாகும்

மாண்பினைப் பகன்றவ  கொட்டுக சிறுபறையே

பண்ணும்[4] நூலும் நால்வகை என்றவா

தொகுத்தல் விரித்தல் தொகைவிரி  மூன்றொடு

நாற்றிசை நூலதை மொழிபெயர்த்துச் செய்தலும்

நன்னூல் மரபென நவின்ற நாயகா

திண்ணிய பொருளொடு துகளறு ஆன்றோர்

திப்பிய மாகச் செப்பிய நூலதைத்

தூசாம் குற்றம் பத்தும் இன்றியே

தொடங்குக என்றவா கொட்டுக சிறுபறையே   7



முழவு


1 - நூற்பா 1259

2 - நூற்பா 1589

3 - நூற்பா 1591

4 - நூற்பா 1592

மலைமுடியில் உருவாகி மழைநீரால் பொங்கிவந்து
மடாரென கொட்டும் மலையருவிப் பேரொலியும்
மயிலும் கிளியும் வண்டொடு மைனா
மரங்களில் எழுப்பும் இன்னிசைச் சேரொலியும்
கலைமான் மறியும் காளையும் கன்றும்
கானாங் கோழியும் கத்தும் குரலொலியும்
கடைதயிர் மத்தொலியும் கோவலர் தம்கைக்
குழலிசை ஏறுகோட் பறையெழு பண்ணொலியும்
குலைக்கமுகு பாளையில் தேன்நுகர் சிட்டொலியும்
களைபறிக்கும் கடைசியர் கைவளைசெய் ஒலியும்
கிணையும் முழவும் எழுப்பும் கொட்டொலியும்
கிடாஎருமை எக்காளம் செந்நாய்செய் ஒலியும்
அலைகடல் பரதவர் அளத்தில் கூடி
அடிக்கும் மீனுகோட் பறையொலியும் தோல்வியுற
அதன்கோட் டாசான் தடையைத் தகர்த்தவனே
அன்பால் அருளிக் கொட்டுக சிறுபறையே 8



பம்பை

கல்லது தோன்றி மண்வராக் காலத்தே
கன்னித் தமிழர் பேசுமொழி முழங்கக்
கபாட புரத்தில் கடல்கோளில் தப்பித்த
கரைசேர்ந்த கணக்கற்ற நூல்கள் முழங்க
சொல்லேர் உழவர் சொல்லால் தொடுத்த
சொன்மாலை மூவேந்தர் புகழினை முழங்க
சொக்கர்வாழ் கூடலில் சேர்ந்த புலவர்
சொல்லிய பாட்டும் தொகையும் முழங்க
வில்லேர் உழவர் சூட்டிய வாகையும்
விளங்கு வீரரின் வெற்றியை முழங்க
விறலியொடு கூத்தரும் விரும்பி ஆடிடும்
வண்டமிழ்க் கூத்தின் வகையெலாம் முழங்கத்
தொல்காப் பியனே இவையெலாம் அடங்கவே
தோற்பறை கொட்டிடுக! தொன்மையைக் காக்க
தோன்றிய குழவியே தொண்டகம் கொட்டிடுக!
தோன்றாத் துணையே கொட்டுக சிறுபறையே! ௭



கொங்கலர் தேருமொரு துங்கநிறை அளிக்கூட்டம்
துள்ளி முரளும் ஓசையை அடக்குவதாய்
தோகையர் இடையாடு மேகலை ஒலித்திடும்
தொடரொலியை என்றும் தோற்று அடக்குவதாய்
இங்கிடைகள் திண்டாடும் என்றஞ்சிச் சிற்றடியில்
ஏங்குமொரு சிலம்பு தோற்று அடங்கிடவே
எத்திசையும் கேட்டிடும் கண்டாம ணிக்குரல்
இற்றுவிழச் செய்யக் கொட்டுக சிறுபறையே
துங்கமுறு மதகரிகள் பரியொடு தேரும்
திண்தோள் மறவரும் எழுப்பொலியும் தோற்றிடவே
துள்ளிவரு காஞ்சிமா நதிவெள்ளம் செய்யொலியும்
தோற்றிடவே திடுமெனக் கொட்டுக சிறுபறையே
சிங்கவொலி மங்கவொலி பொங்கியெழச் செங்கையினில்
சிறுபறை மகிழ்வொடு முழக்கி அருளே
சித்திரை வெள்ளுவாவில் பிறந்தநாள் கண்டிடும்
சீராளா சிறப்புடன் கொட்டுக சிறுபறையே! 10






## 10 சிறுதேர்ப் பருவம்

வெல்லுக அறத்தினொடு மெய்ம்மையும் பொறுமையும்
வெருவந்த செய்யாமை மேன்மை என்றும்
விரவியே பிறர்மனையை நோக்காமை பிறர்பொருளை
விரும்பி வெஃகாமை மேன்மை என்றும்
சொல்லரிய மானமே காப்பாற்ற லவனிமிசை
சாற்று தோற்றமும் மரபு என்றும்
சூழ்முருக் கலரனையர் கலவிநல மாதருடன்
சுகம்பெறத் தோய்விலார் மாந்த ரென்றும்
நல்லதோர் மொழியறிவு நன்றிமறவாப் பண்புடனும்
நற்புகழ் பொறுமை உயர்வ தென்றும்
நவில்தொறும் நூல்நயம் போல்வதுபோல் என்றும்
நற்பண்பாளர் தொடர்பால் நலம்பெறுவ ரென்றும்
சொல்லிய வள்ளுவர் வழிமொழிந்து சொல்லவே
செப்பரிய நூல்தந்த சீர்மிகு சீராளா
செல்லக் குழந்தையே தொல்காப் பியரே
சீரணிச் சிறுதேர் உருட்டி அருளே 1

பைந்தமிழ் நாட்டினர் பண்பாட்டைப் போற்றிப்
பாரோர் வியந்து பழகிக் கைக்கொளவே
பொற்கோட் டிமயம் முடிமிசை மீனொடு
புலிவிற் கொடி பறக்கவே என்றும்
ஐந்திணை ஒழுக்கத்தை நானிலம் தன்னில்
முப்பொருளால் இருவழக்கை ஆய்ந்த ஒருவனே!
ஐந்து பூதமும் கலந்த மயக்கம்
அனைத்தும் அடங்கியது அகிலம் என்றவனே!
ஐந்திரம் நிறைந்த தொல்காப் பியனே
அணிமணித் தேரினை ஓட்டி யருளே
ஆதி பகவனே அனைத்திற்கும் முதலென
அறிவிக்க அகரத்தில் தொடங்கினை நூலினையே
ஐந்தெழுத்து மந்திரத்தை அல்லும் பகலும்
அயராது உருவேற்றும் அருள்மா முனியாம்
ஐயன்மரு தாசலக் கோவால் வழிபடும்
ஐயனே சிறுதேர் உருட்டி யருளே! 2



விட்ட கலவின்றி விரிவொடு பொருத்தி

சுட்டிய சூத்திரம் முடித்த முதல்வா!

விரும்பியே சாந்தையர் திருமடம் வளர்க்கும்

தொல்காப் பியர்தமிழ்ச் சங்கமம் துளங்கவே

பட்டறிவுச் சான்றோர் பாங்குறக் கூடியே

பண்ணுவர் ஆய்வினை பாமரர் அறியவே

பாரெலாம் பண்ணு பலதொழில் புரியவே

பரவிய பைந்தமிழர் பேசுவார் உன்புகழை

பட்டிப் பெருமான் பதிகொண்ட பேரூரில்

பிறவாப் புளியும் இறவாப் பனையும்

பெருமைமிகு நொய்யலும் உள்ளதே அவ்வூரில்

பாராட்டிப் பேசுவோம் உந்தன் நூலினையே

இட்ட இலிங்கம் சேர்ந்த எங்களடிகள்

இராமசாமி பெருமான் திருவுளக் கருத்தால்

எழுந்த பேரவை எழுகண்டம் பரவவே

ஏற்றமுறச் சிறுதேர் உருட்டி அருளே 3



வடக்கில் ஆர்டிக்கும் தெற்கில் பனிநிலமும்
இருபுறம் பசிபிக் சூழ்ந்த உலகினில்
வலத்தொடு தமிழர் வளம்பெற்(று) இலங்கவே
வழிதனைக் காட்டிய வள்ளல் பெருந்தகையே
குடக்கில் தோன்றும் ஆறுகள் பலவும்
குணகடல் கலக்கும் வரையுள நிலமெலாம்
குறிஞ்சி முல்லை மருதம் நெய்தலாய்க்
கூறிப் போந்த குன்றத்து ஒருவிளக்கே
படகினைக் கட்டிய பரதவர் நிலமே
பாரத மானகதை அறியா(து) ஆரியர்
புழுகிய புராணம் உண்மை அன்றெனப்
புரிந்தோம் உன்றன் புகழ்மிகு நூலாலே
வடவர் வேதமோதி நடத்தும் நிகழ்வெலாம்
வந்தவழியில் சென்று போகவே வழியினை
வழங்கிய காப்பியா வணங்கி வேண்டினோம்
வளவாச் சிறுதேர் உருட்டி அருளே 4



உலகத் தமிழர் ஒருங்கு கூடியே
உன்னை வைப்போம் உள்ளத் தேரினிலே
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியரே
உன்மொழி கற்போர் உயர்வார் பாரினிலே
வலத்தைத் தவிர வேறொன் றறியாத்தமிழர்
வடக்கில் கைகூப்பி நிற்பது வேதனையே
எழுத்தில் கூட ஆயுதம் வைத்து
என்றும் அழியா அதிகாரம் தந்தாயே!
சொலவே முடியாப் பெருந்துணையாய் நீயிருந்தும்
பேணிக் காக்காது பேதையர் ஆனோமே
சொந்த மண்ணில் அடிமைகள் போலவே
சோம்பித் திரியும் தமிழர் எல்லாரும்
வலக்கரம் உயர்த்தி வெற்றி பெற்றிட
வாசிப்போம் உன்றன் நூலதை நாளுமே
வான்புகழ் வள்ளுவன் போற்றிய புலவா!
வந்திங்கு சிறுதேர் உருட்டி அருளே! 5



வள்ளுவன் இளங்கோ  வைத்து உன்மொழியை
வகைப்பெறச் செய்தனர் வழங்கிய நூலினிலே
வண்டமிழ் மரபினைக் காக்கும் முயற்சியில்
வந்து நின்ற தானை மறவனே!
உள்ளத் தேரினில் வைத்து இழுக்கவே
உவந்து வந்தார் மருதாச லக்கோவே
ஒவ்வொரு திங்களும் கூட்டிப் பேரவையை
ஒள்ளிய உன்புகழை ஒளியூட்டிக் காட்டுகிறார்
அள்ளி அருளை அடியேன் தனக்கு
அளவின்றித் தந்தார் அதனால் நானுமே
அயரா துழைப்பேன் உன்புகழ் பரப்புவேன்
ஆகவே சிறுதேர் உருட்டி அருளுகவே
தள்ளா விளைச்சலும் தகைவிலாச் செல்வமும்
தண்டமிழ் நாட்டார் பெற்றிடக் காப்பியா
தகைசால் நூலால் தகுமுறை தந்தவா
தனிப்பெரும் சிறுதேர் உருட்டி அருளே 6



பத்துப் பொருத்தம் பாங்காய்க் கூறியே
ஒன்பான் சுவையை எண்வகை மெய்ப்பாடாய்
எழுதிணைக் காக்கியவா அறுவகைப் பொழுதை
ஐவகைத் திணைக்கும் நால்வகை நிலத்தில்
மூன்றதி காரத்தில் இருவகை வழக்கையும்
ஒன்றாய்க் கூட்டி உரைத்த காப்பியனே!
இருவகை எழுத்தில் முப்பஃதை அடக்கி
மூன்று சார்பையும் சேர்க்க என்றவனே!
நான்கு பாவும் அறுவகை உறுப்புடன்
வண்ணம் இருபதாய் வகுத்துக் கொடுத்தவனே!
ஐந்து அடியிலும் எழுவகைத் தளையும்
இருவகை அசையால் இயலும் என்றவனே!
ஒருதனிப் புலவரே இருகை கூப்பி
மூவகைப் படுத்தி நாற்பொருள் தன்னை
ஐவகை நிலத்தார் அடைந்திட ஆறுதல்தரும்
ஐயனே சிறுதேர் உருட்டி அருளே 7



எளிதில் உணரும் நூற்பாவை ஏனோ
எட்டாக் கனியாய் நச்சர் வைத்தார்
எல்லாரும் கற்க முடியாமல் உரை(றை)யால்
எழுதி வைத்து ஒளித்தனர் உரைகாரர்
களித்தான் போலவே நாமதை மயக்கத்தால்
கற்க முடியாது போனதனால் இன்று
கன்னித் தமிழும் பொலிவிழந் ததுவே
காப்பார் இன்றிக் கையற்று நிற்கிறதே
உளியாய் வந்த திசைமொழியால் மலையாம்நாம்
உணரா திருந்து சிதைகின்றோம் உடனே
ஒளிந்து உள்ள காப்பியத்தை ஒவ்வொரு
தமிழனும் வெளிக்கொணர உறுதியை ஏற்போமே
தெளிந்த காப்பியா தெரிவித்தோம் தெள்ளித்
தொல்காப் பியத்தைக் கற்போம் உறுதியிது
தொல்லை தருவோர் இனியில்லை தொடர்ந்து
துன்பமறச் சிறுதேர் உருட்டி அருளே 8




கொங்கு நாட்டார் குலமணியாம் எங்கள்
குலமது தழைக்க வந்த மாமணியாம்
செந்நிற மேனியில் வெண்ணீறு பூசியே
சிறந்தோங்கும் இராமசாமி தொடங்கி வைத்த
பங்க மில்லா பேரவைதான் பார்த்துப்
பயிற்றும் உன்நூலைப் பாரில் உள்ள
பாமரர் அறியப் பாடுபடும் பரிவுடனே
பைம்பூண் தேரை உருட்டி அருளுகவே
செங்கரம் நீட்டி அருள்தந்து சிறியோம்
சிந்தை தெளிவித்து தித்திக்கும் மொழியாலே
சீர்த்தி மிக்க உன்புகழைச் சேர்த்துரைத்து
சீர்வளர்சீர் மருதாசலக் கோவளர்க் கின்றார்
மங்காப் புகழுறு சாந்தையர் மடத்தாலே
மீட்டெடுத்து காக்கின்றோம் மீனவன் அவையில்
முன்பு இருந்ததுபோல் இருப்பாய்க் காப்பியனே
எழிலார் சிறுதேர் உருட்டி அருளே! ௯



வெள்ளை இமயப் பனிவரை மீதினில்
விளக்கி எழுதுவோம் உன்புகழை விருப்புடனே
வெளிநா டெல்லாம் அவைதோற்றி உன்நூல்
விளக்கமுறு வகைசெய வேண்டியதைச்
செய்திடுவோம்
கள்ளமற்ற புன்னகை கொண்ட அடிகள்
காலடி பற்றிக் கடுகிப் பணிசெய்வோம்
காப்பியம் தந்து மொழிதனைக் காத்தவனே
கண்ணோட்டம் கொண்டு உருட்டுக சிறுதேரை
விள்ளும் நாவுடை அதங்கோட்டா சானுக்கு
விடையெலாம் கூறி வந்தவனே உன்னை
விரும்பிக் கற்க வழிகாணும் சங்கமத்தார்
விழைந்து வேண்டினோம் உருட்டுக சிறுதேரைத்
தெள்ளு தமிழின் காவலன் நீரே
திறமுடைத் தமிழரின் அரணும் நீரே
வள்ளுவன் காட்டிய வழித்துணை நீரே
வளம்பெறுகச் சிறுதேர் உருட்டி அருளே 10





# என் வரலாறு

தொல்காப்பியச் செம்மல்

புலவர் **ஆ.காளியப்பன்**,க.மு,.கல் .மு.,

தலைவர், தொல்காப்பியர் தமிழ்ச்சங்கமம்

முத்தம்மாள் நிலையம், பூலுவபட்டி[அஞ்சல்],

கோயமுத்தூர் 641101.

அலைபேசி 9788552993 / 8610684232

Email:amuthankaliappan@gmail.com

www tholkappiyam.org, pulavarkaliappan.blogspot.in

தென்கயிலாய அடிவாரத்தில் காஞ்சிமா நதிக்கரையில் முல்லையும் குறிஞ்சியும் முக்காடிட்ட மருதம் சூழ்ந்த ஊர் பூலுவபட்டி. அவ்வூரில் உலகுக்குச் சோறிடும் உழவர் குடியில் தொல்காப்பியர் பிறந்த சித்திரையில் முருகன் உதித்த செவ்வாய் விசாகத்தில் (13-5-1954) பிறப்பெடுத்தேன். ஆக்கியோர் ஆறுக்குட்டி முத்தம்மாள், ஆளாக்கி விட்டவர் ஆலாந்துறைப் பள்ளி தமிழாசான், ந.இரா.தமிழவேள். அருந்தமிழை ஊட்டியது மேலைச் சிதம்பரமாம் பேரூரில் மிக்கு புகழ் மேவும் சாந்தலிங்கர் தமிழ்க்கல்லூரி. பேரூர் ஆதீனம் சாந்தலிங்க இராமசாமி அடிகள் மாணாக்கன். உளவியல் மேதை திரு.சந்தானம் முதல்வராய் விளங்கிய புதுக்கோட்டை அரசுக்கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சி. பணமும் பணியும் தேடி பம்பாய் வாழ்க்கை பத்து மாதம். இந்தியை அறிய இனிய வாய்ப்பு. தாய் தவறியதால் ஊர் திரும்பல். பிழைப்புக்காக ஒரு தேனீர்க் கடை தொடங்கினேன். எனது தந்தை செய்த முறுக்கு அனைவரையும் கவர்ந்தது. நல்ல வியாபாரம். அத்துடன் ஒரு மளிகைக் கடையும் தொடங்கினேன்.

அந்தச்சமயத்தில் தான், திரு.கம்பராயன் வழக்கறிஞர் ஞானபாரதி ஆகியோர் தொடர்பு கிடத்தது. அவர்களுடன் சேர்ந்து கோவையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கக்கிளை தொடங்கல். அதன் செயற்குழு உறுப்பினருள் நானும் ஒருவன். அதனால் தமிழ்நாடு ஜனநாயக வாலிபர் முன்னணியுடன் இணைந்தேன். அந்தத் தாக்கத்தால்

எங்களூரில் விவசாயக் கூலித் தொழிலாளர் அமைப்பை உருவாக்கி அதில் பண்ணை வேலைக்குப் போகும் அரிசன தோழர்களுக்கு எழுத்தறிவை உண்டாக்க நாளும் இரவு நேரத்தில் வகுப்புகள் நடத்தினேன். அதனால் பலர் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டனர். அவர்களை ஒருங்கிணைத்து எங்கள் ஊரில் முதன் முதலாக மே தினம் கொண்டாடி செங்கொடி ஏற்றினேன். அதனால் பண்ணை முதலாளிகளின் பொய் வழக்கால் தளை செய்து, சிறையில் அடைத்தனர். மூன்று நாள் சிறைவாழ்க்கை. பிணையம் மூலம் வெளி வந்தேன். அங்கு சில அனுபவங்களும் படிப்பினையும் கிடைத்தன அவற்றுள் முதன்மையானது ''வெட்ட வருபவனக்குக் கழுத்தை நீட்டு நீ வெட்ட நினைக்காதே. நீ வெட்டினால் நீ சிறைக்கு வந்து விடுவாய் உன் குடும்பம் அனாதை ஆகும். கொலைகாரக் குடும்பம் என்று அவர்களை ஊரே தூற்றும்'' என்று ஒரு வாழ்நாள் இல்லவாசி கூறியதில் எவ்வளவு உண்மை உள்ளது.

வழக்கில் வெற்றி பெற்ற நான் நடத்துநர் உரிமம் பெற்றுப் பேருந்தில் பயணச்சீட்டு ஆய்வாளர் பணி செய்தேன். அப்போது தான் எனக்கு பொதுநலச் சிந்தனை தோன்றியது முதன் முதலில் பள்ளி, கல்லூரி மாணாக்கருக்குப் பயணச் சலுகை அளித்தேன். அதனால் பல ஏழை மாணாக்கர் பயன் பெற்றனர். இப்பொழுதும் அவர்கள் என்னைக் காணும் போதெல்லாம் அதை நினைவு கூர்ந்து உங்களால் தான் வழக்கறிஞர் ஆனேன், வட்டாட்சியர் ஆனேன் எனும் போது தோன்றும் மகிழ்வுக்கு அளவே இல்லை. அஞ்சலகக் கிளை அதிகாரி பணி கிடைத்ததால், நடத்துநர் பணியைத் துறந்தேன். மிகப்பெரிய ஒரு விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த முடிந்தது. ஊரில் அனைத்துக் குடும்பங்களையும் அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டத்தில் இணைத்தேன் அதனால் 280 ரூபாய் ஊதியத்தில் இருந்த எனக்கு ஆறே மாதத்தில் 480 உயர்த்தியது மேலும் கோவை மாவட்டத்திலேயே முன்னோடிக் கிளை அஞ்சலக அதிகாரி (BPM)என்ற பாராட்டுப் பத்திரத்தை அன்றைய அஞ்சலக கண்காணிப்பாளர் வழங்கியதை இன்றும் பெருமையாகக் கருதுகிறேன். அந்தச் சமயத்தில் தான் வாழ்க்கைத் துணையாக அம்சவேணி என்பாரைப் பெரியோர்கள் சேர்த்து வைத்தார்கள். அவர் மூலமாய்ப்

பெறுமவற்றுள் பெருஞ்செல்வமாய் அறிவறிந்த இந்துமதி உமாபதி என்னும் இரண்டு சொத்துக்களைப் பெற்றேன். அஞ்சலகப் பணியோடு பூலுவபட்டிப் பகுதியில் அனைத்து செய்தித்தாள் முகவர் ஆனேன். அதே சமயம் எல்லா வார மாத இதழ்களையும் விற்பனை செய்தேன். அந்தச் சமயத்தில் நியாயத்தராசு என்னும் இதழ் தோன்றியது. அதில் உள்ள வாசகம் நாமார்க்கும் குடியல்லோம் என்பது அப்பர் அடிகள் வாக்கு. இது எனது எண்ணப்படி சேர்க்கப்பட்டது. அதன் கோவை மாவட்ட முகவர் நான்.

இப்படி அஞ்சலகப் பணியாளராகவும், பத்திரிகை முகவராகவும் தினமலர்ச் செய்தி முகவராகவும் இருந்த சமயம் பெரிச்சிபாளையம் அரசு இடைநிலைப் பள்ளியில் ஆசிரியர் பணி கிடத்தது. அப்பள்ளி அரசு உதவி பெறும் முஸ்லீம்பள்ளி அதனால் சில புதிய அனுபவம் வெள்ளி, சனி விடுமுறை ஞாயிறு பள்ளி இருக்கும். நாங்கள் எட்டு ஆசிரியர்கள் எட்டுக் குழந்தைகள் கூடப்பள்ளிக்கு வரார். அப்போது தொலைக்காட்சிப்பெட்டி வந்த சமயம். அந்தப்பணி ஆறே மாதந்தான். என்னை வாழ்விலும் வளத்திலும் உயர்த்திய உடுமலை கரட்டூர் காந்தி கலா நிலையம் மேனிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணி. அப்பள்ளித்தாளளர் திரு.திருமலைசாமி ஐயா அவர்கள் பண்பையும் நேர்மையையும் மறக்கமுடியாது. அங்கு இருந்த ஒரு ஆங்கில ஆசிரியர் தமிழாசிரியருக்கு ஒரு சுவிட்சுக் கூடப் போடத் தெரியாது என்று ஏளனம் பேசினார். அதைப் பொறுக்காத நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தொலைதூரக் கல்வி இயக்கத்தில் பி.எஸ்.சி கணக்குப் படிக்கத் தொடங்கினேன். இந்தியிலும் டிப்ளமோ படித்தேன் மாணாக்கர்களுக்கு ஐந்து பாடங்களிலும் தனிப்பயிற்சி வகுப்பு எடுத்தேன். மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் என்னிடம் பயின்றவர்கள் முதல், இரண்டாம் இடங்களைப் பலமுறை பெற்றனர்.

ஒரு சமயம் என்னுடைய தனிப்பயிற்சியில் கல்வி பெற்றவர் எண்ணிக்கை 385 ஆக இருந்தது. எனது பணியைப் பாராட்டி நிர்வாகம் முதுகலைத் தமிழாசிரியர் பணியும், உதவித் தலைமை ஆசிரியர் பதவியும் தந்தது. அரசுப் பள்ளியில் தமிழ்வழிக் கல்வியில் பயின்ற எனக்கு மகள் இந்துமதி மாநில அளவில்

பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வென்றதால் அகில இந்திய வானொலி நிலையத்தில் வேலை கிடைத்தது. அந்தச் சமயம் கோயில் குடமுழுக்குச் சமயங்களில் நேரடி வருணனை செய்யும் வாய்ப்புப் பெற்றார் அவர் MA B.L வழக்கறிஞர் பணி சிறப்பாக இருந்ததால் வானொலி நிலையப் பணியைத் துறந்தார்.

நான் பணி நிறைவுக்குப் பின் மீண்டும் சொந்த ஊர் பூலுவபட்டிக்கு வந்தேன். அடுக்குமாடி கட்டி வாடகைக்கு விட்டேன். நான் அரசுப்பணிகையில் என்ற அமைப்பின் மூலம் TRB & TNPSC தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி அளித்தேன். அதன் மூலம் 6 ஆசிரியர்களும் 4 கிராம நிர்வாக அதிகாரிகளும் பணி பெற்றனர். இத்துடன் ஒரு தோட்டத்தில் தொல்காப்பியப் பயிலரங்கம் எனும் அமைப்பின் மூலம் தொல்காப்பியத்தைப் பாமர மக்களுக்கு அறிமுகம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டேன். இந்தச் செய்தியைப் பேரூர் ஆதீனம் அறிந்து தொல்காப்பியப் பயிலரங்கம் எங்கள் கல்லூரியில் நடத்தினால் மாணவர்களுக்கும் பயனாக இருக்கும் என்றார். அவரது அருள் ஆணைப்படி தொல்காப்பியப் பயிலரங்கம் தொல்காப்பியர் பேரவை என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதன் தொடக்க விழாவைப் பேரூர்த் திருமடம் மிகச் சிறப்பாக நடத்தியது. அன்று முதல் ஒவ்வொரு திங்களும் முதல் ஞாயிறு அதன் அமர்வுகள் இடையறாது நிகழ்ந்து வருகின்றன. அந்தச் சமயத்தில் புதுச்சேரி முனைவர் இளங்கோவன் நியூசெர்சி நாச்சி.க.நிதி துபாய் சுரேஸ் பாரதி முயற்சியால் உலகத் தொல்காப்பிய மன்றம் உண்டாக்கப் பட்டது. அதில் என்னை நெறியாளராக இணைத்தார்கள். நான் உருவாக்கிய தொல்காப்பியர் பேரவை, தொல்காப்பியர் தமிழ்ச் சங்கமம் என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டு தனித்து இயங்கி வருகிறது அதன் மூலம் சிறு எழுத்தாளர்கள் நூல்கள் வெளிடப்பட்டன.

சிறப்புரையைத் தொல்காப்பியத்தில் தோய்ந்த ஒரு முனைவர் அல்லது புலவரைக் கொண்டும், தலைமை உரையை ஒரு தமிழறிஞரைக் கொண்டும் நிகழ்த்தி வருகிறோம். முன்னிலையாகக் குடத்துள் விளக்காக ஒளிரும் பலரும் அறியாத, வயது முதிர்ந்த சமூகத் தொண்டர் அல்லது தமிழ்

ஆர்வலரைக் கொண்டும் நிகழ்த்துகிறோம். ஒரிசாப் புயல், கொரானா தாக்கம் முதல் அமைச்சர் நிவாரண நிதிக்கெல்லாம் நிதி வழங்கப்பட்டது. அமைதி ஆசிரமம் எனும் அநாதை விடுதிக்கு ரூ.11000 மதிப்புள்ள துணிகளும், உணவு வழங்க ரூ.10000 மும் தரப்பட்டது. இப்பணிகளைப் பாராட்டி பல அமைப்புகள் வழங்கிய பட்டம் விருது ஆகியவற்றை விட கொச்சி தமிழ் ஐக்கியச் சங்கம் மற்றும் எர்ணாகுளம் தமிழ் இலக்கிய வட்டமும் இணைந்து கேரள உயர்நீமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் ப.சு.கோபிநாதன் கையால் எனக்கு வழங்கிய தொல்காப்பியச் செம்மல் எனும் விருதினைப் பெரிதும் போற்றுகிறேன்.

அச்சங்கமம் மூலம் தொல்காப்பியத்தை ஆய்வு செய்யும் ஒரு மாணவனுக்கு ஆண்டுதோறும் ரூ.10500 வழங்க வங்கியில் ரூ.1,50,000 வைப்புத் தொகை செய்யப் பட்டுள்ளது. இத்தொகையை வழங்கியவர் அமெரிக்கா நியூஜெர்சி அறிவியலறிஞர் நா.க.நிதி ஐயா அவர்கள். தொல்காப்பியர், தொல்காப்பியன் எனப் பெயர் வைக்கும் குழந்தைகளுக்கு ரூ.1000 வழங்கவும் செய்து வருகிறோம். சிட்டி யூனியன் வங்கியிலும், கோவை வழக்கறிஞர் அறையிலும் தொல்காப்பியர் படம் திறக்கப்பட்டது.

தமிழ்மொழிக் கல்வி மொழியாகவும் வழக்காடு மன்ற மொழியாகவும் வழிபாட்டு மொழியாகவும் ஆக்க வேண்டமென மாபெரும் உண்ணாநிலைப் போராட்டம் அனைத்துச் சமய, கட்சிகளை இணைத்துச் செய்யப் பட்டது. அதன் தீர்மானங்களை தமிழக அரசிடம் வழங்கப்பட்டது. இப்படி அறப்பணிகளையும் தமிழ்ப்பணியும் செய்து வருகிறோம். நான் பத்திற்கும் மேற்பட்ட நூல்கள் எழுதி இருந்தும் பொருளாதாரம் காரணமாக வெளியிட முடியவில்லை. ஒவ்வொரு ஆண்டும் தொல்காப்பியர் நாள், திருவள்ளுவர் நாள், தாய்மொழி வளர்ச்சி நாள் கொண்டாடி வருகிறோம். இவ்வளவும் ரூ.3000 மாதந்தோறும் எனது ஒய்வூதியத் திலிருந்தும் கொடுத்தும் பேரூர் அடிகள் உதவியாலும் செய்து வருகிறேன்.

அனைத்துக்கும் மேலாக பேரூரடிகள் உதவியாலும் அமெரிக்கா நா.க.நிதி ஐயா உதவியாலும் 03.10.2021 நாளன்று

ஐம்பொன்னாலான சுமார் ஆறு லட்சம் மதிப்புடைய தொல்காப்பியர் உருவச் சிலை பேரூர், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி கயிலைக்குருமணி இருபத்து நான்காம் பட்டம் தெய்வப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் தொண்ணூற்று ஆறாம் அகவை விழா நாளன்று அமைக்கப்பட்டது.

இப்படிக்கு

தொல்காப்பியர் அன்பர் அடிப்பொடி, தொல்காப்பியச் செம்மல்

புலவர் **ஆ.காளியப்பன்,** க.மு,. கல்.மு.

---

## நன்றி நவில்ல்

**தந்தையாய்த் தனியா சானாய்த் தரணியில்**
**முந்தித் தவஞ்செய்து முத்தாய் ஈன்றெடுத்து**
**எந்தனை ஏற்றமுறச் செய்த என்னருந்**
**தந்தைக்கு நன்றி என்னைப் போலவே**
**செந்தமிழ் தொல்காப் பியருக்கும் பிள்ளைத்தமிழ்**
**சிந்தித்து வழங்கிய தந்தைக்கு நன்றி**

அன்புடன் அரும்புதல்வன்

கவிச்சுடர் **கா.உமாபதி** எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்

செயலாளர் தொல்காப்பியர் தமிழ்ச்சங்கமம்-

உதவி நூலகர்- சிரவை ஆதீனம்

அ.பே.எ *9942411498*

## நன்றி மலர்கள்

முனைவர்.நாச்சி.க.நிதி அவர்கள்,
செயலாளர் உலகத்தொல்காப்பிய மன்றம்
நியூசெர்சி அமெரிக்க

முனைவர் இரா.சுகுமார் அவர்கள்
பள்ளித்தாளாளர் - முதல்வர் ரூபிக் மெட்ரிக் மேனிலைப்பள்ளி,
சரவணம்பட்டி கோவை

இந்நூலை விலைகொடுத்து வாங்கி வாசிக்கும்
அனைவர்க்கும்